


மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்.

முகமது இப்ராஹிம் & கம்பெனி, சென்னை. S. கண்ணன் & கம்பெனி, திருச்சிராப்பள்ளி, V. S. ராஜகோபாலன் கம்பெனி, சென்னை, பங்களூர், சேலம், கோயமுத்தூர். M. A. ஹிருதயசாமி & கம்பெனி, உதகமண்டலம்.

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!



மாயா பானர்ஜி



"என்னுடைய சருமத்தை பளிச்சென்றும், மிருதுவாகவும் வைத்துக்கொள்ள நான் ஒன்றும் கஷ்டப்படுவதேயில்லை" என்கிறார் மாயா; "ஏனென்றால் நான் தவறாமல் லக்ஸ் டாய்லட் சோப்பை உபயோகிக்கிறேன்." இந்த வாசனையுள்ள அழகிய சோப்பின் நுரை சருமத்தின் மயிர்க் கண்களை அழுக்கும், அசுத்தமும் இல்லாமல் வைப்பதுடன், சருமத்தை மிருதுவாகவும், தூய்மையாகவும் அழகாகவும் செய்கிறது. அநேக இந்திய சினிமா நக்ஷத்திரங்கள் லக்ஸ் டாய்லட் சோப்பைத் தவறாமல் உபயோகிக்கிறார்கள்.

லக்ஸ் டாய்லட் சோப்

LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி பொருளடக்கம்

மலர் 4
இதழ் 10

1944 அக்டோபர் 8

தாரண ௵ புரட்டாசி 23

இது வரைக்கும் இந்தியாவிலே வசூலாகியிருக்கும் நிதிகளுக்குள்ளே கஸ்தூரிபா நிதிதான் பெரியது' என்று தெரிகிறது. மகாத்மாவின் 75-ம் பிறந்த தினத்தில் கொடுப்பதற்கு 75 லட்சம் ரூபாய் வேண்டுமென்று பெரியோர்கள் கேட்க, தேசம் ஒரு கோடிக்கு மேலாகவே கொடுத்துவிட்டது. தமிழ் நாடு இதில் பெருமையடையக்கூடிய பங்கு — 9 லட்சம் — கொடுத்திருக்கிறது. ஆனால் தேசத்திலேயாகட்டும், தமிழ் நாட்டிலேயாகட்டும், கேட்ட தொகையைக் காட்டிலும் இரண்டு பங்குக்கு மேல் கொடுத்த பிரதேசம் ஏதுவாவது உண்டா என்று கேட்டால், "உண்டு; அது தஞ்சாவூர் ஜில்லாதான்" என்று தஞ்சை ஜில்லாக்காரர்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம்.



ஒன்றரை மாதத்துக்கு முன்புவரையில் தஞ்சாவூர் ஜில்லாவில் மேற்படி நிதிக்காக வசூலே ஆகவில்லை. இதைக் குறித்து, "தஞ்சை ஏன் பின்வாங்குகிறது?" என்று நாம் எழுதினோம். அதே சமயத்தில் ஸ்ரீ வி. நாடிமுத்துப் பிள்ளை அவர்களுக்கும் அந்த விஷயம் மனதில் உதயமாகி, நிதி வசூலில் தீவிரமாக ஈடுபட்டார். ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை, ஸ்ரீ கிருஷ்ணசாமி வாண்டையார் முதலியவர்களின் உதவியுடன் தீவிரமாக வேலை செய்து, தஞ்சைக்கு ஏற்பட்ட பங்கைப் போல் இரண்டு பங்கு சேர்த்துக் கொடுத்துத் தஞ்சாவூரின் நற்பெயரை நிலைநாட்டினார்.

தஞ்சை ஜில்லாவிலேயே பெரிய செல்வர் ஸ்ரீ வி. நாடிமுத்துப் பிள்ளை என்று சொல்லப்படுகிறது. இதன் உண்மை எப்படியானாலும், தேசபக்தி என்ற செல்வத்தை நிறையப் படைத்தவர் அவர் என்பதில் சந்தேகமில்லை. அந்தச் செல்வத்திலே சிறந்தவர்கள் என்று பிரசித்தி பெற்ற தஞ்சாவூர் மிராசுதார்களுக்கு அவர் சரியான பிரதிநிதிதான்.



கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 10

என்ன சேதி?

சங்கமும் தங்கமும்

"சங்கம் செய்கிறது தங்கம் செய்யாது" என்னும் பழமொழியை இது வரையில் நாம் கேட்டதில்லை. பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் அனுப்பியுள்ள அறிக்கை யொன்றிலேதான் பார்த்தோம். மேற்படி பழமொழியையோ, புது மொழியையோ, அனுசரித்து, பம்பாய்—மாதுங்காவிலுள்ள தமிழர்கள் ஒரு தமிழ்ச் சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்த விஜய தசமி யன்று ஸ்ரீ என். என். ஐயர் அவர்களின் தலைமையில் நடந்த ஒரு சங்கக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சியைக் குறித்து அருமையான பிரசங்கங்கள் நடந்தனவாம். இப்படி அப்படி என்று கடைசியில் இமய மலையின் உச்சியிலேயே தமிழ்த் தாயின் கொடி பறக்கும் காட்சியை நம்முடைய காலத்திலேயே பார்த்து விடுவோ மென்று தோன்றுகிறது.

தீபாவளி மலர்

இமயமலையின் உச்சியில் தமிழ்க் கொடி கட்டிப் பறக்கும்போது, அதிலே இந்த வருஷத்துக் 'கல்கி' தீபாவளி மலரின் அட்டை பொறிக்கப்பட்டிருக்கும் என்று கருதுகிறோம். தமிழ்க் கடவுளை அட்டைப் படத்திலே தாங்கிக் கொண்டு, கலைத் தேவிக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் இந்த வருஷத்துக் "கல்கி" தீபாவளி மலர் உலக அற்புதங்களில் ஒன்றாக விளங்கும் என்று தோன்றுகிறது.

சர்க்கார் காகிதக் கட்டுப்பாட்டின் காரணமாகப் பக்கங்கள் குறைவுதான். ஆனால் பக்கங்களின் குறைவுக்காக மலரின் விலையை இந்த வருஷம் கூட்டவும் இல்லை; குறைக்கவும் இல்லை. சென்ற வருஷத்தைப் போலவே இந்த வருஷமும் ரூ. 2—8—0 தான். இதிலிருந்து மலரில் அடங்கிய சித்திர அற்புதங்களும், விஷய அதிசயங்களும் எப்படி யிருக்கு மென்று நேயர்கள் ஊகித்துக் கொள்ளலாம். சொல்வது குறைவாகவும் செய்வது அதிகமாகவும் இருக்க வேண்டுமே என்பதற்காக மலரின் வர்ணனையை இத்துடன் நிறுத்துகிறோம்.

அபத்தப் பரிசு

வருஷத்துக்கு ஒரு முறை நோபல் பரிசு கொடுப்பதுபோல், வாரத்துக்கு ஒரு தடவை "அபத்தப் பரிசு" என்று ஏற்படுத்தி, அந்தந்த வாரத்திலே வெளியான சிறந்த அபத்தத்துக்குப் பரிசு கொடுப்பதா யிருந்தால், சென்ற வாரத்துப் பரிசு நமது மாஜி வைஸராய் லின்லித்கோ பிரபுவுக்குத்தான் கொடுக்க வேண்டும்.

மனுஷர் இந்தியாவை விட்டுப் போன பிறகும், இந்தியாவின் க்ஷேமத்தை மறந்து விடவில்லை. "இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இடையே றென்று காலமாகி விட்டால், இந்தியாவில் அராஜகமும் இரத்தக்களரியும் ஏற்படும். இந்திய மக்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாவார்கள். ஆகையால், இந்தியாவின் நன்மைக்காக அப்படிப்பட்ட காரியத்தை பிரிட்டிஷார் செய்யக்கூடாது!" என்று எச்சரித்திருக்கிறார்.

பாவம்! மனுஷர் கால்நடைகளுடன் பழகிப் பழகி மூளை ரொம்ப ரொம்பக் கட்டையாகிவிட்டதென்று தோன்றுகிறது? இல்லாவிட்டால், பக்கத்திலுள்ள ஐரோப்பாவில் ஒரே இனத்தையும் ஒரே நிறத்தையும் ஒரே மதத்தையும் சேர்ந்த ஜனங்கள் இப்படி இரத்தக் களரி செய்து செத்து வரும்போது, எங்கேயோ ஆறாயிரம் மைலுக்கு அப்பாலுள்ள இந்தியாவைப் பற்றி இப்படித் தமது அருமையான கண்ணீரைச் செலவு செய்து கொண்டிருப்பாரா!


நிகழ்ச்சிச் சித்திரம்

ஹிந்து மகாசபையின் யுத்த தந்திரங்கள்.


மூஞ்சே, பழைய பஞ்சதந்திரக்கதைகளுக்குப் புது மெருகு கொடுக்கிறார்.



-உம்மன்



வே.ராப் பெரியாரை ஹிந்து மகாசபையில் பிடித்துப் போட்டுக் கொள்ள டாக்டர் மூஞ்சே பெருமுயற்சி செய்வதாகத் தெரிகிறது.



குண்டர்களை அடக்குங்கள்
(இந்திய சர்க்கார் விளம்பரத்திலிருந்து எடுக்கப்பட்டது)
சமீபத்தில் டாக்டர் அம்பேத்கார் நமது வேத நூல்களைக் கேவலமாகத்தாக்கிப் பேசியிருப்பது நாடெங்கும் ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கிறது.

வேறு வழி காட்டுங்கள்!

கந்துகமதக் கரியை வசமாய் நடத்தலாம்; கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்; பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியா சுயராஜ்யம் பெற்றாலும் பெறலாம்; ஜனாப் ஜின்னாவின் காலத்திலே ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டாலும் ஏற்படலாம்; ஆனால், நமது மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரை ஏமாற்றமும் துக்கமும் அடையாமல் செய்வது மட்டும் அரிதரிதுதான்! ஒரு நாளும் முடியாத காரியம்தான்!

காந்தி மகாத்மா ராஜாஜி திட்டத்தை ஒப்புக்கொண்டதாகச் செய்தி கிடைத்தவுடனே மகா கனம் சாஸ்திரியார் மூர்ச்சையடைந்து விழுந்தார். உடனே துள்ளி எழுந்திருந்து, "ஆகா! பாரத தேசத்தைப் பிளப்பதா? என் நெஞ்சு பிளந்து விடும்போலிருக்கிறதே!" என்று புலம்பினார்.

அப்புறம், காந்தி மகாத்மா ஜனாப் ஜின்னாவைச் சந்தித்துப் பேசப் போகிறார் என்ற செய்தியைக் கேட்டதும், மகா கனம் சாஸ்திரியாருக்கு ஏற்பட்ட துக்கத்துக்கு அளவே இல்லை. பால்ய வயதாக மட்டும் இருந்திருந்தால், வர்தாவுக்கே போய் ஆசிரமத்து வாசலில் மறியல் செய்திருப்பார். அவ்வளவு ஆத்திரத்தையும் ஆக்ரோஷத்தையும் ஆங்காரத்தையும் தமது பேச்சுக்களிலே கொட்டிக் கொண்டிருந்தார்.

"தேசத்தைப் பிளப்பதற்கு முன்னால் என் கையை வெட்டிக் கொள்வேன்; என் காதை அறுத்துக் கொள்வேன்!" என்றெல்லாம் பயங்கர வார்த்தைகளை இரத்தம் சொட்டச் சொட்டப் பேசி வந்தார்!

பம்பாயிலே ஜனாப் ஜின்னா-காந்தி பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருந்த போது, எங்கே "பேச்சு வெற்றியடைந்தது; சமரசம் ஆகி விட்டது" என்ற செய்தி வந்து விடுமோ என்று சென்னையிலே நாம் வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தோம். அப்படிப்பட்ட செய்தி வந்தால், அது நமது சாஸ்திரியாரின் பலஹீன இருதயத்துக்கு ஆபத்தைக் கொண்டு விடாமல் இருக்க வேண்டுமே, சாஸ்திரியாரின் அருமையான வால்மீகி ராமாயண ஆராய்ச்சிப் பிரசங்கங்களுக்குத் தடை நேராமல் இருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம்.

நல்ல வேளையாக, கடைசியில், பத்தொன்பது நாள் சம்பாஷணைக்குப் பிறகு, "காரியம் கைகூடவில்லை; பேச்சு முறிந்தது" என்ற செய்தி வந்ததும், மற்றப்படி எது எக்கேடு கெட்டுப் போனாலும், நமது சாஸ்திரியாரின் மனம் குளிரும், இருதயம் சாந்தியடையும், அவருடைய தேகம் ஆரோக்கியமடையும் என்று நமக்கு ஆறுதல் உண்டாயிற்று.

ஆனால், நடந்தது என்ன? "பேச்சு முறிந்தது" என்ற செய்தி வந்ததும், சாஸ்திரியார் ஒரு அறிக்கை விடுத்தார். அதை எப்படி ஆரம்பித்தார், தெரியுமா?

"சத்தியாக்கிரஹிகளுக்கு என்ன வந்தது? அவர்களுக்கு வெற்றியும் ஒன்றுதான்; தோல்வியும் ஒன்றுதான். ஆனால் நம்மைப் போன்ற சாமான்யர்களுக்கு பம்பாய்ப் பேச்சு முறிந்த செய்தி பெரும் ஏமாற்றத்தையே அளிக்கிறது!" என்று பழைய அழுகைப் புராணத்தையே மறுபடியும் சாஸ்திரியார் ஆரம்பித்தார்.

சாஸ்திரியாருக்கு என்னத்திற்காக ஏமாற்றம் ஏற்பட வேண்டும்? மகாத்மா — ஜின்னா சந்திப்பு வெற்றியடைய வேண்டும் என்று விரும்பியவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டால் அதில் அர்த்தம் உண்டு. சந்திப்பு வெற்றியடைந்தால் தேசமே நாசமாகி விடும் என்று சொல்லி வந்தவர்களுக்கு, பேச்சு முறிந்ததினால் என் ஏமாற்றம் வரவேண்டும்? தேசத்தைப் பிளந்தால் கையை வெட்டிக் கொள்வேன், காலை வெட்டிக் கொள்வேன் என்று கதறியவர்கள், எதற்காக ஏமாற்றமடைகிறார்கள்? காலை வெட்டிக் கொள்ளவும், கையை வெட்டிக் கொள்ளவும் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டதே என்பதற்காகவா!

சாஸ்திரியாரை உத்தேசித்து மட்டும் நாம் இதையெல்லாம் சொல்லவில்லை. அவரைப் போன்ற மனோபாவங் கொண்ட 'சாஸ்திரி'யார்கள் இன்னும் எவ்வளவோ பேர் நாட்டில் இருக்கிறார்கள்.

ராஜாஜி திட்டத்தை மகாத்மா ஒப்புக் கொண்டார் என்ற செய்தி வந்ததிலிருந்து, அந்த இரு தேசத் தலைவர்களையும் அவர்களுடைய சமரசத்

திட்டத்தையும் கடுமையாகத் தாக்குவதே மேற்படி பிளாஸ்திரியார்களின் தொழிலாயிருந்தது.

அவர்களுடைய தாக்குதலை ஒன்றுக்குப் பத்தாக அதிகமாக்கிக் காட்டும் கைங்கரியத்தைச் சிற்சில பத்திரிகைகள் செய்து வந்தன.

பஞ்சாபிலே ஒரு ஹிந்து மகாசபைக்காரர் ராஜாஜி திட்டத்தைக் கண்டித்து ஒரு அறிக்கை வெளியிடுவார். அந்த ஒரு மனிதருடைய கண்டனம், "பஞ்சாப் எதிர்க்கிறது!" என்ற கொட்டைத் தலைப்பின் கீழ் பத்திரிகைகளில் வெளியாகும்.

அடுத்தாற்போல் பம்பாயில் மாகாணம் முழுவதையுஞ் சேர்ந்த காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் கூடி மேற்படி திட்டத்தை ஆதரிப்பார்கள். இது "பம்பாய்க் காங்கிரஸ் வாதிகளின் ஆதரவு" என்ற சின்னத் தலைப்பின் கீழ்ப் பிரசுரமாகும். அதைப் பம்பாய் வாசிகளின் ஆதரவு என்று கூட ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

இம்மாதிரியே தனிப்பட்ட ஆசாமிகளின் விரோத அபிப்பிராயத்தை, "வங்காளம் சீறுகிறது!" "அஸ்ஸாம் அலறுகிறது!" "பாகிஸ்தானை எதிர்க்கப் பம்பாய் பிராணனைக் கொடுக்கத் தயார்!" என்றெல்லாம் பிரசுரிப்பார்கள். இருபதினாயிரம் ஜனங்கள் கொண்ட கூட்டத்தில் திட்டம் ஆதரிக்கப் பட்டால், "பிரம்பூர் பொதுக் கூட்டத்தில் ஆதரவு" என்று சின்னத் தலைப்புப் போடுவார்கள்.

இன்னும், "தேசம் பிளக்கப் படுவதற்கு முன்னால் எங்களைப் பிளவுங்கள் என்று பிறாரில் ஒரு லட்சம் இளைஞர்கள் கர்ஜிக்கிறார்கள்" என்பது போன்ற திகில் தரும் செய்திகளையும் பார்த்தோம்.

போகட்டும்: தேசத்திலே அவ்வளவு பயங்கரமான எதிர்ப்பைக் கிளப்பிய ராஜாஜி திட்டத்தை ஜனாப் ஜின்னா ஏற்றுக் கொள்ளவில்லை; ராஜிப் பேச்சும் முறிந்து விட்டது.

இனிமேல் என்ன? அத்திட்டத்தை எதிர்த்தவர்கள், குறை கூறியவர்கள், திட்டியவர்கள், சாபங் கொடுத்தவர்கள் எல்லாரும் இப்போது என்ன சொல்கிறார்கள்?

காந்திஜி தோற்றுப் போய்விட்டார்; ராஜாஜி திட்டமும் போய்விட்டது!

அதனோடு எல்லாம் சரியாகிப் போய் விட்டதா? திருப்தியடைந்து சும்மா இருந்துவிடலாமா?

தேசம் விடுதலை பெற வேண்டுமா வேண்டாமா?

"தேசத்தைப் பிளப்பதற்கு முன்னால் எங்கள் தேகத்தைப் பிளவுங்கள்!" என்று கர்ஜனை செய்த அந்த லட்சோப லட்சம் வீரர்கள் இப்போது என்ன செய்யப் போகிறார்கள்? அப்பேர்ப்பட்டவர்களுடைய வீரத்தை யெல்லாம் பயன்படுத்திக் கொண்டு, அவர்களுடைய தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள், அன்னிய ஆட்சியிலிருந்து தேசத்தை விடுதலை செய்யும் காரியத்தை ஏன் மேற்கொள்ளக் கூடாது?

ஆம்: இன்னமும் இந்தப் புண்ணிய பாரத பூமி அன்னிய ஆட்சியின் கீழ்தான் இருக்கிறது. ரொம்ப ரொம்ப அழுத்தமான அன்னிய ஆட்சியின் கீழ் இருக்கிறது என்பதை நமக்கு நன்கு நினைவூட்டும் சம்பவம் ஒன்று சென்ற வாரத்தில் நடந்திருக்கிறது. அது, காமன்ஸ் சபையில், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில் துரை நிகழ்த்திய விஸ்தாரமான பிரசங்கந்தான்.

அந்தப் பிரசங்கத்தில் சர்ச்சில் துரை யுத்த நிலைமையைப் பற்றிப் பூமியிலிருந்து ஆகாசம் வரையிலும் தென் துருவத்திலிருந்து வட துருவம் வரையிலும் விஸ்தரித்துப் பேசி வரும்போது, ஏழை இந்தியா தேசத்தையும் மறந்து விடாமல் குறிப்பிட்டார். "இந்தியா என்று சொன்னாலே நாக்குச் சுட்டு விடும்" என்பதுபோல் வெகு காலம் இந்தியாவைப் பற்றிப் பிரஸ்தாபியாமல் விட்டு வந்தவர், அமெரிக்காவுக்குப் போய்விட்டு வந்தபின் [illegible] தானோ, என்னமோ, இந்தியா தேசத்தைப் பற்றியும் அருமையோடு நாலு வார்த்தை சொன்னார்:—

"உலகத்தில் புயல்களுக்கும் குழப்பங்களுக்கும் நடுவில் இந்தியாவும் இந்தியாவின் இரண்டு ஜனங்களும் [illegible] கொடியத்துக்குப் பின்னால் சுகமாகவும் அமைதியாகவும் இருந்து வந்தார்கள். உலகத்தில் வேறெந்தப் பகுதியைக் காட்டிலும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட இந்தியாவில் சென்ற 80 வருஷத்தில் கத்தி, துப்பாக்கிகளால் செத்தவர்கள் குறைவு என்பதைச் சில சமயம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்."

மிஸ்டர் மக்வான்:—"ஆனால் பசி பிணியால் செத்துப் போனார்களே?"

கனம் சர்ச்சில்:—"நல்லது! சென்ற பத்து வருஷத்தில் ஜனத்தொகையில் 600 லட்சம் பேர் அதிகமாகியிருக்

றார்கள்(!)*** உலகத்திலேயே இவ்வளவு வேகமாக ஜனத்தொகை வேறு எங்கும் அபிவிருத்தி யடைந்ததில்லை!" (கரகோஷம்)

சர்ச்சிலின் மேற்படி அருமையான வார்த்தைகளைப் படித்து நேயர்களும் கரகோஷம் செய்து மகிழ்வார்களென்று நம்புகிறோம். பாரத மக்கள் நாற்பது கோடி பேரும் கரகோஷம் செய்ய வேண்டியதுதான்!

பஞ்சத்திலே இந்தியர்கள் செத்துப் போனதை சர்ச்சில் ஒத்துக் கொள்கிறார் அதுவும், "இராணுவ நிலைமை காரணமாக ரயில் போக்கு வரவில் ஏற்பட்ட கோளாறினால்" பஞ்சம் வந்ததென்றும் ஒப்புக் கொள்கிறார்.

"ஆனால், பஞ்சத்திலே 60 லட்சம் ஜனங்கள் செத்து மடிந்தால் என்ன மோசம்? பத்து வருஷத்தில் 600 லட்சம் ஜனங்கள் அதிகமாகி யிருக்கிறார்களே? பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட இந்தியாவிலே தவிர வேறெங்கே யாவது இந்த அதிசயம் உண்டா?"—என்று கேட்கிறார்.

இங்கிலாந்தும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்தான் இருக்கிறது என்பதாக நமக்கு ஞாபகம். இங்கிலாந்தில் ஜனத்தொகை வேகமாக அபிவிருத்தி யடையவில்லை யென்றால், அதற்கு இந்தியா ஜவாப்தாரி யல்ல. இங்கிலாந்தின் இராணுவ நிலைமை இந்தியாவின் இராணுவ நிலைமையை விடக் கடுமையானதாகத்தான் இருக்க வேண்டும். ரயில் போக்குவரவில் நெருக்கடியும் அதிகமாகத்தான் இருக்க வேண்டும். ஆனாலும் இங்கிலாந்திலே பஞ்சத்தினால் ஒருவர் கூடச் சாகவில்லை!

பின் ஏன் இந்தியாவில் மட்டும் லட்சக் கணக்காகப் பஞ்சத்தில் செத்தார்கள்? என்று கேட்டால்,

"செத்தால் என்ன மோசம்? செத்துப் போனவர்கள் போக, மிச்சமிருப்பவர்கள் போதாதா?" என்று சர்ச்சில் புண்ணியவான் சொல்கிறார்.

ராஜாஜி திட்டத்தை எதிர்த்தவர்கள், காந்தி — ஜின்னா சந்திப்பை எதிர்த்தவர்கள், ராஜாஜியைத் திட்டியவர்கள், காந்திஜியைச் சபித்தவர்கள், காந்திஜி — ஜின்னா பேச்சு முறிந்ததில் சந்தோஷப்பட்டவர்கள், ஏமாற்றம் அடைந்தவர்கள் — எல்லாருக்கும் மேற்படி சர்ச்சிலின் பதிலைச் சமர்ப்பிக்கிறோம்.

இப்படிப்பட்ட பிரதம மந்திரியைக் கொண்ட பிரிட்டிஷ் ஆட்சியிலேயே அவர்கள் இருக்க இஷ்டப்படுகிறார்களா என்று கேட்கிறோம். 'இல்லை' என்றால், தேச விடுதலைக்கு வேறு என்ன வழி அவர்கள் காட்டுகிறார்கள் என்று வினவுகிறோம்.

ராஜாஜி — காந்திஜி திட்டத்தை நிராகரித்து ராஜிப் பேச்சை முறித்த ஜனாப் ஜின்னாவையுந்தான் அவ்வாறு கேட்கிறோம்.

ஹிந்து மகா சபைக்காரர்கள் என்ன, சாஸ்திரி, ஜெயகர், ஸாவர்க்கர் போன்ற பிரமுகர்கள் என்ன, — இவர்களுடைய ஆர்ப்பாட்டமான எதிர்ப்புகளை யெல்லாம் பொருட்படுத்தாமல் காந்திஜியும் ராஜாஜியும் முஸ்லிம் லீக்கின் கோரிக்கையைச் சாராம்சத்தில் ஒப்புக்கொண்டார்கள். தேசத்தைப் பிரித்து முஸ்லிம்கள் பெரும் பான்மையோராயுள்ள பிரதேசத்தைத் தனி ராஜ்யமாக்க இசைந்தார்கள்.

ஜனாப் ஜின்னாவுக்கு அது போதவில்லை. அவர் போகாத ஊருக்கு வழி சொல்லி, ஹிந்து — முஸ்லிம் சமரசத்துக்கும் தேச விடுதலைக்கும் ஏற்பட்டிருந்த அரிய சந்தர்ப்பத்தைக் கை நழுவ விட்டு விட்டார்.

போனால் போகட்டும்; அதனாலும் பாதகமில்லை.

"தயவு செய்து உங்கள் சொந்த வழியில் நீங்கள் பாகிஸ்தானை ஸ்தாபித்துக் கொண்டு எங்களுக்கும் தேச விடுதலைக்கும் வழி காட்டுங்கள்" என்று ஜனாப் ஜின்னாவைக் கேட்கிறோம்.

ஜனாப் ஜின்னா பாகிஸ்தான் ஸ்தாபிப்பது பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறாமல் ஒருநாளும் நடக்காத காரியம். எனவே, எப்படியாவது உங்கள் பாகிஸ்தான் பிரதேசத்தை நீங்களே நிர்ணயித்துக் கொண்டு, அங்கிருந்து பிரிட்டிஷாரை அப்புறப்படுத்திச் சுதந்திர பாகிஸ்தானை ஸ்தாபித்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறோம். அதைப் பார்த்து விட்டு, மற்றப் பகுதியைச் சேர்ந்தவர்களும் அதே வழியைப் பின் பற்றிச் சுதந்திரம் அடையலா மல்லவா?

ஜனாப் ஜின்னா கடைசியாகப் பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்த பேட்டியில், "எப்படியும் பாகிஸ்தானை அடைவேன்! அடைவேன்! அடைவேன்!" என்று விருது கூறியிருப்பது நமக்கு நம்பிக்கை ஊட்டுகிறது.

"அப்படியே பாகிஸ்தானை அடைந்து எங்களுக்கும் விடுதலைக்கு வழி காட்டுங்கள்!" என்று அவரைக் கேட்கிறோம்.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "சரியான பதில்" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: சௌந்திரா, பெத்தம் சர்லா, கர்னூல் ஜில்லா.



வர்தா வைபவம்

நாடோடி

இரண்டு நாட்களாக என்னைப் பார்க்கிறவர்கள் எல்லாம், "என்ன ஸார்! ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு நடக்கிறீர்களே! என்ன சமாசாரம்? ஏதோ விசேஷம் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறதே" என்று கேட்கிறார்கள்.

இவர்கள் எல்லாருக்கும் நான் "அதுதான் உங்களுக்கே தெரிந்திருக்கிறதே ஏதோ விசேஷம் இருக்க வேண்டுமென்று. விசேஷந்தான்" என்றேன்.

"என்னதான், அப்படி பெரிய விசேஷம்? வாயைத் திறந்துதான் சொல்லுமேன்!" என்றார் ஒருவர்.

"அதுவா? வர்தா போய் வந்தேன்" என்றேன்.

"வர்தாவா! மகாத்மா காந்தி இருக்கும் இடத்துக்கா!"

"ஆமாம், அதே சாக்ஷாத் சேவா கிராமத்துக்குத்தான். அதுவும் அவருடைய 75 வது பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு."

"அப்படியானால் நீர் ரொம்ப பாக்கியசாலிதான்."

"சந்தேகமென்ன? அதனால்தான் ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு நடக்கிறேன். இன்னும் கொஞ்சம் நாள் போனால் கண்ணை மூடிக்கொண்டு கூட நடப்பேன்" என்றேன்.


உண்மையிலேயே, வர்தா போய் விட்டு வந்த இரண்டு நாட்களாக எனக்கு நிலை கொள்ளாமலேயே இருக்கிறது. மகாத்மா காந்திஜியை, சேவா கிராமத்தில், அவருடைய 75 வது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது தரிசித்த நான் அப்படி தரிசிக்காத மற்ற எல்லாரையும் விட ஒரு படி மேலே போய்விட்டதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

* * *

வர்தாவுக்குப் போவதற்காக சனிக்கிழமை காலை ஏழு மணிக்கு ஸெண்ட்ரல் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தேன்.

ரயில் புறப்பட்டுச் சற்று நேரத்துக்குள்ளேயே, "வர்தா வரதா, வரதா" என்று ஆகிவிட்டது. காரணம், என்னுடன் கூட வந்த கஸ்தூரிபா நிதி தமிழ்நாட்டுக் காரியதரிசி ஸ்ரீ கோபாலசாமியும் இன்னும் இரு தமிழர்களும்தான்.

சென்னையிலிருந்து வர்தா ஒரு நாள் பிரயாணம்தான் என்னும் விஷயம் வர்தாவுக்கு எத்தனையோ தடவை போய்விட்டு வந்திருக்கும் இவர்களுக்குத் தெரிந்த விஷயமே. இருந்தும் ஏதோ பத்து நாள் பிரயாணத்துக்குப் புறப்படுவதுபோல் புளியஞ் சாதமும் தயிர் சாதமும் மூட்டைகட்டிக்கொண்டு



...... காந்திஜி வருகிறார்!

வந்து சேர்ந்திருந்தார்கள். இதில் நான்கில் ஒரு பங்கைத் தீர்க்கும் பொறுப்பை நான் எடுத்துக் கொண்டாக வேண்டும் என்று என்னை வற்புறுத்தினால் நான் வர்தா, வர்தா, வர்தா என்று ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டே சென்றதில் என்ன ஆச்சரியம்?

ஆகவே ஞாயிற்றுக்கிழமை காலை வர்தா ஜங்ஷன் வந்து சேர்ந்ததும் நான் கொண்ட சந்தோஷம் கொஞ்சம் நஞ்சமல்ல. இதற்கு மேலே சொன்ன காரணம் ஒருபுறமிருக்க, இன்னொரு முக்கிய காரணமும் உண்டு.

வர்தா வழியாக, நான் இதற்கு முன்னர் எத்தனையோ தடவைகள் சென்றிருக்கிறேன். வர்தா ஜங்ஷன் வந்ததும், "ஆஹா! காந்தி மகான் தங்கியிருக்கும் இடமல்லவா? அவரைத் தரிசிக்காமல் போகிறோமே" என்று வருத்தப்பட்டிருக்கிறேன்.

வர்தா வழியாக எத்தனையோ தடவை சென்றும், காந்திஜியைப் பார்க்க முடியாமல் சென்ற எனக்கு, இந்தத் தடவை கட்டாயம் காந்திஜியைப் பார்க்கப் போகிறோம் என்றதும் உண்டான சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல.

இத்தனை நாளாக அவரைப் பார்க்க நான் கொண்டிருந்த ஆவலை அறிந்தவரைப் போல, நானும் போய்ச் சேர்ந்தேன்; காந்திஜியும் பம்பாயிலிருந்து அதே சமயம் வந்திறங்கினார்.

காந்திஜியுடனேயே சேவா கிராமத்துக்குப் போக வேண்டுமென்று நான் வெகு ஆவலாக இருந்தேன். ஆனால் அந்த ஆசை நிறைவேற வொட்டாமல் செய்து விட்டார்கள், அங்கு நீல அரை நிஜாரும், வெள்ளை ஷர்ட்டும் அணிந்து கொண்டிருந்த சில தொண்டர்கள்.

வர்தாவிலிருந்து சேவா கிராமம் கிட்டத்தட்ட எட்டு மைல் இருக்கும். இந்த இரண்டு இடங்களுக்கு மிடையில் வர்த்தகக் கல்லூரி ஒன்று இருக்கிறது. எங்களைப் போல் காந்திஜியைப் பார்ப்பதற்காக வரும் எல்லாரையும் அங்கே வளைத்து வைத்து எங்களுக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் செய்து கொடுப்பதை இக்கல்லூரி மாணவர்கள் அன்று தங்கள் வேலையாக கொண்டிருந்தார்கள்.

அப்பா! அந்தப் பொல்லாத மாணவர்களை இப்பொழுது நினைத்தாலும் ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

எங்களை ஒரு நிமிஷம் கூட விடாமல், ஒருவர் மாற்றி ஒருவர் உள்ளே நுழைந்து எங்கள் பிராணனை வாங்கி விட்டார்கள். "வெந்நீர் வேண்டுமா" என்று கேட்டார் ஒருவர். சாய், (அதுதான் டீ) வேண்டுமா என்று கேட்டார் இவருக்குப் பின்னால் வந்த இன்னொருவர். "பாம்பே சூடா, ஸார், பாம்பே சூடா" என்று எடுத்துக் கொண்டு ஓடி வந்தார் இன்னொருவர். "வாழைப் பழம் ஸார், வாழைப் பழம் ஸார்" என்று நச்சரித்து விட்டார் இன்னொருவர்.

தொந்தரவு பொறுக்காமல் இத்தனையையும் சாப்பிட்டு முடிப்பதற்குள் "சாப்பாட்டுக்கு வா, சாப்பாட்டுக்கு வா" என்று வேறு நச்சரித்து விட்டார்கள்.

சரி, சாப்பிட்டு விட்டுத்தான் வருவோம் என்று சாப்பாட்டு மண்டபத்துக்குள் நுழைந்தோம்.

அந்தப் பக்கத்துச் சாப்பாட்டுக்கும் இந்தப் பக்கத்துச் சாப்பாட்டுக்கும் எவ்வளவோ வித்தியாசம். இங்கே உள்ளது போல் அங்கே சாம்பார், ரஸம், மோர் ஒன்றும் கிடையாது. ஏதோ இரண்டு கறியை வைக்கிறார்கள். பிறகு சாஸ்திரத்துக்குக் காக்காப் பிடி அன்னத்தைக் கண்ணில் காட்டி விட்டு, மாறி, மாறி, ரொட்டியைக் கொண்டு வந்து தள்ளுகிறார்கள். அந்தச் சாப்பாட்டைத் தமிழர்கள் சாப்பிட வேண்டுமானால் 32 பல் போதாது, 64 பல் வேண்டும்!

சாப்பிட்டு முடிந்து அறைக்குப் போனால் இந்தத் தொண்டர்கள் நிம்மதியாக விட்டார்கள் என்கிறீர்களா? ஒருவர் பின் ஒருவராகச் "சாப்பிட்டாச்சா, சாப்பிட்டாச்சா" என்று விசாரித்துக் கொண்டு போனார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும், "சாப்பிட்டாச்சு, சாப்பிட்டாச்சு" என்று பதில் சொல்லி முடிப்பதற்குள் நாவு தீர்ந்து விட்டது, பசியும் வந்து விட்டது. கடைசியில், "சாப்பிட்டாச்சா" என்று கேட்ட தொண்டர்களிடம் "இல்லை" என்று சொல்லி இரண்டாம் தடவை சாப்பிட வேண்டி வந்து விட்டது! இதனால் முதல் பந்தியில் ஆட்டம் கண்ட என் பற்கள் இன்னும் அதிகமாக ஆட ஆரம்பித்து விட்டன.

சரி, மேலும் அங்கேயே தங்கி யிருந்தால் மூன்றும் தடவை சாப்பிட வேண்டி வந்தாலும் வந்துவிடும் என்று பயந்து கொண்டு, சேவா கிராமத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

மத்தியானம் மூன்று மணிக்கு சேவா கிராமத்தை அடைந்தோம். ஏழெட்டு சிறு குடிசைகளுக்கு நடுவில் இருந்த காந்திஜியின் குடிசையை அடைந்தோம். வாசல் பக்கமாக உள்ள திண்ணைக் கருகில் காந்திஜி காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். பக்கத்தில் டாக்டர் சுசீலா நாயர் முதலானோர் உட்கார்ந்திருந்தார்கள். அன்று பகல் 12 மணியிலிருந்து காந்திஜி தமது மௌனத்தை ஆரம்பித்து விட்டபடியால் யாருடனும் பேசவில்லை. அவருடைய பேத்திகள் இருவர் அவரை ஏதேதோ கேலி செய்து கொண்டிருந்தார்கள். அதற்கெல்லாம் அவர் வாய் விட்டுச் சிரித்துக்கொண்டிருந்தார்.

மணி நாலானதும் காந்திஜி சட, சட என்று எழுந்து பக்கத்துக் குடிசைக்குள் நுழைந்தார். கூடவே காந்திஜியுடன் இருந்த எல்லாரும் எழுந்து சென்றார்கள். எதற்காக இந்தக் குடிசையை விட்டு அந்தக் குடிசைக்குப் போனார் என்பது எனக்கு முதலில் விளங்கவில்லை. பிறகு குடிசையின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்ததில் விஷயம் விளங்கிற்று. காந்திஜியும், அவர் கூட இருந்தவர்களும் நூற்க ஆரம்பித்து விட்டார்கள்! அந்தக் குடிசை காலஞ் சென்ற ஸ்ரீ மகாதேவ தேசாய் வசித்த குடிசை என்றும், அதில் இப்பொழுது எல்லாரும் வழக்கமாகச் சேர்ந்து உட்கார்ந்து நூற்கிறார்கள் என்றும் தெரிந்து கொண்டேன்.

காந்திஜி நூற்று விட்டுத் தம் குடிசைக்குத் திரும்பும் பொழுது, அவரைப் பிடித்துத் தம் காமிராப் பெட்டிக்குள் போட்டு விடுவது என்று எங்கள் காமிராக்காரர் வழியில் நின்றுகொண்டு விட்டார். அவருக்குத் துணையாக நான் நின்றேன். எனக்குத் துணையாகப் பக்கத்தில் ஸ்ரீ எல். என். கோபாலசுவாமி நின்றார்.

கடைசியில் காந்திஜி வந்தார். தடியின்றி, பக்கத்தில் பிடித்துக் கொள்ள ஆளுமின்றித் தனியாக வந்தார். இதைக் கண்டதும் அவர் பேத்திகள் சந்தோஷத்தால் துள்ளிக் குதிக்க ஆரம்பித்து விட்டனர். "பாபுஜி தடியில்லாமல் நடக்கிறார், பாபுஜி தடியில்லாமல் நடக்கிறார்" என்று ஆரவாரம் செய்தனர்.

அப்பொழுது காந்திஜி என்னைப் பார்த்துச் சிரித்தார்.

ஆனால் காந்திஜி அப்படி என்னைப் பார்த்துச் சிரித்தது எனக்கு அனர்த்தமாகப் போய்விட்டது. இதன் காரணமாக ஸ்ரீ கோபாலசாமிக்கும் எனக்கும் சண்டையே வந்துவிட்டது. என்னைப் பார்த்துத்தான் காந்திஜி சிரித்தார் என்று நான் சொன்னேன். தன்னைப் பார்த்துத்தான் சிரித்ததாக அவர் சொன்னார். நான் கொடுத்த புளியஞ் சாதத்தையும், உருளைக் கிழங்கு வறுவலையும் திருப்பிக்கொடு என்று அவர் சொல்லும் நிலைமைக்குச் சண்டை முற்றி விட்டது! நாளைக்கு இதைப் பற்றிக் காந்திஜியைக் கேட்டு விடுவது என்று

...... இதோ ராஜாஜியும் வந்து விட்டார்!



தீர்மானித்துக் கொண்டு நாங்கள் தங்கியிருந்த கல்லூரிக்குத் திரும்பினோம்.

பிறந்த நாள் கொண்டாட்டத்தை அடுத்த நாள் பகல் 2 மணிக்கு ஆரம்பிப்பது என்று தீர்மானித்திருந்தார்கள். வர்தாவிலிருந்து மோட்டார் வண்டிகளிலும், டாங்கா வண்டிகளிலும், ரேக்ளா வண்டிகளிலும், மாட்டு வண்டிகளிலும், கால் நடையாகவும் ஜனங்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

கூட்டத்துக்கு முன்னால் நாமும் போய்ச் சேரவேண்டும் என்று ஒரு மணிக்கே காந்திஜியின் குடிசையை அடைந்தோம். காந்திஜி, வழக்கம்போல் தம் இருப்பிடத்தில் இருந்தார். பக்கத்தில் அன்று காலை தான் வர்தா வந்து சேர்ந்த ராஜாஜி, புலாபாய் தேசாய், சரோஜினிதேவி எல்லோரும் இருந்தார்கள். முதல் நாளே காந்திஜியுடன் வந்து இறங்கி விட்ட தக்கர் பாபா அங்கு மிங்கும் சுற்றிக்கொண்டிருந்தார்.

கஸ்தூரிபா நிதிக்காகப் பாங்கியில் சேர்ந்திருந்த பணத்துக்கு பாங்கி ரசீது வாங்கி அதை ஒரு உறையில் போட்டு வைத்திருந்தார் பாபா. அன்று நிதியை காந்திஜியிடம் சரோஜினி தேவி சமர்ப்பிப்பது என்று தீர்மானமாகியிருந்தபடியால் தக்கர் பாபா அந்த உறையை சரோஜினி தேவியிடம் கொடுத்தார்.

உறையை வாங்கிக் கொண்டதும் சரோஜினிதேவி காந்திஜியைப் பார்த்து, "பணத்தை உங்களிடம் கொடுக்கப் போவதில்லை. நானே எடுத்துக் கொள்ளப் போகிறேன். என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார். அதற்குக் காந்திஜி சிரித்துக் கொண்டு, "ஆமாம், உன்னை நம்ப முடியாது. நீ எடுத்துக் கொண்டு போனாலும் போய் விடுவாய்" என்றார்.

அதற்குள் ஒருவர் சரோஜினி தேவியைப் பார்த்து "நீங்களும் ஒரு டிரஸ்டியாக இருப்பதால் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடிப்போய்விட முடியாது" என்று ஞாபகப்படுத்தினார்.

"அப்படியானால் ஒன்று பண்ணுங்கள். விழா ஆரம்பிக்க இன்னும் அரை மணி நேரந்தான் இருக்கிறது. அதற்குள் உங்கள் டிரஸ்டி வேலையை ராஜிநாமாச் செய்து விடுங்கள்" என்று யுக்தி சொல்லிக் கொடுத்தார் பக்கத்தில் இருந்த இன்னொருவர்!

இதற்கிடையில் வெளியே, ஸ்ரீமதி கஸ்தூரிபா வசித்த குடிசைக்கு எதிரே போடப்பட்டிருந்த கொட்டகையில் கூட்டம் நிரம்பி விட்டது. 2000 பேருக்கு மேலிருக்கும் ஜனம். அத்தனை பேரும் காந்திஜி பேசப் போவதைக் கேட்க ஆவலாக இருந்தபடியால் ஆசிரமவாசி ஒருவர் ஒலி பெருக்கும் கருவி அமைத்திருந்தார்.

ஆனால் இதைக் கேள்விப்பட்டதும் காந்திஜி ஒலி பெருக்கும் கருவி இருக்கக் கூடாது என்று உத்தரவிட்டு விட்டார்.

இது அந்த ஆசிரமவாசிக்குப் பெருத்த ஏமாற்றமாகி விட்டது.

அதைப் பார்த்து ராஜாஜி "ஏனய்யா அப்படி திகைத்து நிற்கிறீர்! காந்திஜி வேண்டாம் என்றால் எடுத்து விடும்" என்றார். அப்பொழுதும் அந்த ஆசிரம வாசிக்கு அந்த ஒலி பெருக்கும் கருவியை எடுக்க மனமில்லை. கடைசியில் ராஜாஜி, "வேண்டுமானால் நான், புலாபாய் தேசாய், சரோஜினி தேவி மூவரும் தங்கியிருக்கும் விடுதியில் கொண்டுபோய் அந்த ஒலி பெருக்கும் கருவியை வையும். நாங்கள் மூவரும் உம் ஆசை தீரக் கத்துகிறோம்" என்று சொன்ன பிறகுதான் அந்த ஆசிரமவாசி ஒலி பெருக்கும் கருவியை அப்புறப் படுத்தினார்.

காந்திஜி அத்தனை கண்டிப்பாக ஒலி பெருக்கும் கருவி கூடாது என்று சொன்னதன் காரணம் எனக்குப் பின்னர் தான் விளங்கிற்று. வர்தாவில் பொதுக் கூட்டங்கள் கூட்டக் கூடாது என்று ஒரு தடை உத்தரவு இருக்கிறது. அந்த உத்தரவை மீறக் கூடாது என்றுதான், காந்திஜி அன்று வந்திருந்த கூட்டத்தைப் பொதுக் கூட்டமாக மாற்ற இஷ்டப்படவில்லை.

அவரே அன்று பின்னால் கூட்டத்தில் சொன்னதுபோல் இந்த நிதி சம்பந்தமாகத் தாம் அழைப்பு அனுப்பியவர்களுடன் மட்டுமே அவர் பேச விரும்பினார். "பாக்கி அழைக்கப்படாமல் கூட்டத்துக்கு வந்திருந்தவர்களை நான் எப்படிப் போ என்று சொல்ல முடியும்!" என்றும் கூறினார். இது நிற்க.

அந்த ஆசிரமவாசி ஒலி பெருக்குக் கருவியை அப்புறப் படுத்துவதற்குள் மணி இட்டதட்ட இரண்டாகி விட்டது. உடனே தக்கர் பாபா காந்திஜியை அழைத்துச் செல்வதற்கு அங்கு வந்து சேர்ந்தார்.

இதைப் பார்த்து சரோஜினி "என்ன, பிறந்த நாள் குழந்தையை அழைத்துச் செல்ல வந்திருக்கிறீர்களா! ஒரு தொட்டிலில் போட்டு எடுத்துச் செல்லுங்கள்"

என்றார். காந்திஜியும் மற்ற எல்லாரும் இதைக் கேட்டு நகைத்தார்கள்.

சரியாக இரண்டு மணிக்கு விழா ஆரம்பமாயிற்று. காந்திஜி வந்து நின்றதும் சரோஜினி தேவி எழுந்து நின்று காந்திஜிக்கு நெற்றியில் திலகமிட்டுத் தலையில் புஷ்பங்களைச் சொரிந்தார். சொரிந்து விட்டுத் தம் நெற்றியில் விரல்களை வைத்துச் சொடுக்கித் திருஷ்டி கழித்தார்.

இதற்குப் பிறகு ஹிந்துஸ்தானி தாலிமீ சங்கத்தைச் சேர்ந்த குழந்தைகள் காந்திஜிமீது பாட்டுப் பாடியதும் விழா ஆரம்பமாயிற்று.

தக்கர் பாபாவுக்காக அவரது அறிக்கையை சுவாமி ஆனந்த் வாசித்தார். தக்கர் பாபா எழுதிய அந்த அறிக்கையை சுவாமி ஆனந்த் வாசித்துக் கொண்டே போகையில் ஒரு வேடிக்கை நடந்தது. ஒரு இடத்தில், "இன்னும் கொஞ்சம் நாளில் எனக்கும் 75-வயது முடியப் போகிறது" என்று அவர் வாசித்தார். அப்பொழுது சபையில் கொல்லென்று சிரிப்பு ஏற்பட்டது. ஏனெனில் சுவாமி ஆனந்தருக்கு வயது 50, 55 தான் இருக்கும். இதைக் கண்டு அவர் உடனே "எனக்கல்ல, தக்கர் பாபாவுக்கு" என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டார்.

அறிக்கை படித்து முடிக்கப்பட்டதும், கஸ்தூரி பா நிதியின் மாகாண காரியதரிசிகள் ஒவ்வொருவரின் பெயரும் படிக்கப்பட்டது. அவரவர்கள் தங்கள் தங்கள் இடத்தில் எழுந்து நின்று வணக்கம் செய்தார்கள். காந்திஜியும் அவர்களைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.

இதற்குப் பிறகு காந்திஜி ஹிந்துஸ்தானியில் பேசினார். பணம் சேர்ப்பது கஷ்டம், ஆனால் அதைவிடக் கஷ்டம் அதை நன்கு செலவிடுவது என்றார். கிராமங்களில் சேர்க்கப்பட்ட தனத்தில் முக்கால் பங்கு அங்கங்கேயே ஸ்திரீகள் குழந்தைகள் இவர்கள் நன்மைக்காகச் செலவழிக்கப்படும் என்றார். இது விஷயமாக வேலை செய்ய ஸ்திரீ தொண்டர்கள் நிறைய முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீ அரியநாயகம் தம்பதியும் குழந்தைகளும் 'ஜன கண மன' என்ற கீதத்தைப் பாட விழா இனிது முடிந்தது.

கஸ்தூரிபா நிதி இன்று வரை ஒரு கோடியே பத்து லட்சம் சேர்ந்திருக்கிறது. இருந்தும் இது போதாது என்றே தோன்றுகிறது. ஏனெனில் காந்திஜியின் வயதுக்கும் இதற்கும் ஒரு சம்பந்தம் ஏற்படுத்தி விட்டார்கள். 75 வது பிறந்த நாள் அன்று 75 லட்சம் அளிப்பது என்று தீர்மானித்தார்கள். ஆனால் நிதி இப்பொழுது ஒரு கோடியே பத்து லட்சம் ஆகிவிட்டதால் காந்திஜி கட்டாயம் 110 வயதாவது வாழ்ந்தாக வேண்டும் என்று ஆகிறது. ஆனால் காந்திஜி தாம் 125 வயதாவது வாழ வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறபடியால் நிதியைக் குறைந்த பட்சம் ஒன்றே கால் கோடியாவது பண்ண வேண்டியது நம் எல்லாருடைய கடமையாகும்!



வான சஞ்சாரம்

"இசைத் தேனீ"

முன் காலத்தில் சங்கீத வித்வான்கள் இரு வகையாகப் பிரிக்கப் பட்டிருந்தனர். உருப்படிகளைக் கையாளுபவர் சாதாரணப் பாடகர்கள், ராகம் பல்லவி பாடுகிறவர்கள் பெரிய வித்வான்கள். ரேடியோ புரோகிராம்களில் ராகம், தானம், பல்லவி என்று காணும் நிகழ்ச்சிகள் அவைகளின் முக்கியத்தை அறிந்து நன்கு கையாளுபவர்களுக் காகவே ஏற்பாடாகின்றன என்று நம்புகிறேன். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் இவளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை. செப்டம்பர் 27௳ சென்னை நிலையத்தின் திறம்பட ஹேமவதியை ஆலாபனை செய்து தானம்பாடி 'சரவணனே' என்ற பல்லவியையும் கையாண்டது குறிப்பிடத் தக்கதா யிருந்தது.

அன்றிரவு 10-மணிக்குத் தங்கு தடையில் லாத உருப்படியாய், விருவிருப்பும், கனிப்பும் படைத்த சாரீரத்துடன் எஸ். வி. பார்த்த சாரதி மோஹனம், பைரவி ஆகிய ராகங் களை விளாசினார். 'யாருக்கும் பொய்ம்மை இருமை' என்ற உருப்படியில் நிரவலும், ஸ்வரமும் வெகு முடுக்கா யிருந்தன.

28௳ திருச்சியில் கேட்ட கோசல பாகவத ரின் கச்சேரி உயர்தரமாகவே தென்பட்டது. சஞ்சாரமான சாரீரம். அழுத்தமான பாட்டு. 'காணக் கண் கோடி வேண்டும்' என்ற பல்லவியை நல்ல ஞானாசாரத்துடன் விளம் பினார். பல்லவி ஸ்வரத்தில், வஸந்தா ஷண் முகப்ரியா இவைகளாலான ராகமாலிகை ருசிகரமா யிருந்தது. சாதாரணமாய்க் கேட் கப்படாத அபேரி ராகமும் அதில் 'என்ன தான் சொன்னாடி' என்ற உருப்படியும் நன்றாயிருந்தன.

சென்னையில் மாலையிலும் இரவிலும் வராளி, ஷண்முகப்ரியா, சாவேரி முதலிய ராகங்களை நின்று நிதானித்து கவனிக்கத் தக்க வாறு பாடியவர் இளம் பாடகர் டி. கே. ஆராவமுதன் என்று அறிந்தேன். சாவேரி யில் இவர் எடுத்துக் கொண்ட 'அம்பா நீ ஸங்கராமணே' என்ற உருப்படி உருக்கமா யிருந்தது.

29௳ திருச்சி நிலையத்துக்கு நல்ல யோகம். மூன்று சிறந்த கச்சேரிகள். காலையிலும் பிற் பகலிலும் கே. ராமசாமி, ஆபோகி, கரஹர ப்ரியா, காபி முதலிய ராகங்களை ஒரு கை பார்த்தோடு 'குருவை மறவாதே' என்ற உருப்படியில் சாஹித்யத் தெளிவுடன் உருக்கித் தள்ளிவிட்டார்.

இரவு 8-மணிக்கு செம்பொன்னார்கோயில் குஞ்சிதபாதம் பிள்ளை வாசித்த நாகஸ்வரம் மிகச் சிறப்பு வாய்ந்திருந்தது. அடங்கிய நாதத்துடன், தோடியை விஸ்தாரமாயும், கீழ் ஸ்தாயிகளில் விசேஷ சஞ்சாரத்துடனும் ஆலாபனை செய்து பல்லவியில் ராகமாலிகை யையும் வழங்கினார். திருச்சியிலிருந்து கேட் கும் கச்சேரிகளில் இது வரைச் சலசலப்பே யில்லாது தெளிவாய்க் கேட்டது பெரிய விசேஷமல்லவா? அதற்கும் பதிலாகத் தவில் காரர் நானிருக்கிறேன் என்று காண்பித்து விட்டார்.

இவைகள் எல்லாவற்றையும்விட, அன் றைய தினம் கேட்ட கே. கோமதியின் சங் கீதம்தான் என்னை ஆச்சரியப்படச் செய்தது. தெளிவு, இனிமை, கனிப்பு எல்லாம் கொண்ட குரல், சிறந்த ராக பாவம், ஸ்வ ரங்களை உயிராகப் பதிக்கும் திறமை பிரத்யேகம். நீண்ட கார்வைகள், அடுக்குப் பிடிகள், அழகிய சாதக பிருக்காக்கள். வேறென்ன வேண்டும்? மோஹன ராகத்தில் மூன்று ஸ்தாயிகளிலும் பரிபூரண சஞ்சாரம். மேல்பஞ்சமம், அநாயாசமாய்ப் பிடிக்கப் பட்டது. 'எவரய்யா உன்னை விட' என்ற உருப்படியில் அசாத்திய வேகப்பாடுகள் காணப்பட்டன. தர்பார் ராகமும் யோசனா கிருதியும், மாண்டு ராகத்தில் 'வானத்தின் மீது' என்ற உருப்படியும் அழகாயிருந்தன. ஆரம்பத்திலேயே தன் கைச் சரக்கு முழு வதையும் காட்டிவிட வேண்டும் என்ற ஆத் திரத்தில் சாஹித்யத்தை பிர்க்காக்களிலும் சங்கதிகளிலும் பயந்து ஒளிந்து கொள்ளும் படி செய்து விடுகிறார்.

2௳ திருச்சியில் நடைபெற்ற ஸ்ரீ ராஜ மாணிக்கம் பிள்ளையின் பிடில் கச்சேரி சென்ற வார நிகழ்ச்சிகளுக்குச் சிகரமாயிருந்தது. ஆரபி, தேவமனோஹரி, மோஹனம், வாசஸ் பதி ஆகிய ராகங்கள் சௌந்தர்ய வடிவங்க ளாக இலங்கின. கடைசியில் வாசித்த நீலாம் பரி, நாதநாமக்ரியா, எதுகுலகாம்போதி இவையாலான ராகமாலிகை எல்லாவற்றை யும் தூக்கியடித்தது. எதுகுலகாம்போதியில் தன்னை மறந்து சொக்கிவிட்டார்.

அக்டோபர் 1௳ திருச்சியில் கேட்ட ஆர். நாராயணஸ்வாமியின் பாட்டு அன் றைய நிகழ்ச்சிகளில், சிறந்து விளங்கியது. நல்ல சாரீரமும், பாணியும் அழுத்தமும் காணப்பட்டன. சங்கராபரணம், முகாரி, கல்யாணி இவைகளை நன்கு கையாண்டார். 'இனியாகிலும்' என்ற உருப்படியில் நிரவ லும் ஸ்வரமும் ஜோரா யிருந்தன.

கச்சேரி முடிவில், 'ரேடியோ அன்னௌன் ஸர் 'லால்குடி சுப்ரமணிய பிள்ளை வயலின்' என்று தெளிவாய்ச் சொல்லிவிட்டு, பிறகு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு 'மிருதங்கம்' என்று திருத்திச் சொன்னார். நூற்றுக் கணக் கான பெயர்களை மாதக் கணக்காய்ச் சொல்ல வேண்டியவர்களுக்கு இம்மாதிரி வாய் தவறு தல் வருவது சகஜம்தான். அன்று தெளிவாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு திருத்தலை வெளியிட்ட மாதிரி எப்பொழுதுமே இந் நிலையத்தார் செய்வார்களானால் இப்போ துள்ள புரோகிராம் குழப்பங்களில் கேட் போருக்குச் சோதனையா யிருக்காது.



அத்தியாயம் 21

குண்டோதரன் கதை

குண்டோதரன் குதிரையிலிருந்து குதித்து இறங்கி வந்து, சாலையில் நின்ற ஆயனரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். பின்னர், எழுந்து, "குருவே! என்னை ஆசிர்வாதம் செய்யுங்கள். தங்களுடைய திருவருளினாலேதான் நான் உங்களை வந்து கண்டு பிடித்தேன்" என்றான்.

"ரொம்ப சந்தோஷம், குண்டோதரா! நீ தேடிக் கொண்டு வந்து சேர்ந்ததிலே எனக்கு வெகு சந்தோஷம். ஆனால் உன்னைக் கைவிட்டு விட்டு நாங்கள் வந்து விடவில்லையே? நீ அல்லவா திடீரென்று எங்களைக் கைவிட்டு விட்டு மாயமாய் மறைந்து விட்டாய்? ... எங்கே, அப்பா, போயிருந்தாய்?" என்று ஆயனர் கேட்க, குண்டோதரன், "குருவே! நான் என்ன செய்வேன்! காஞ்சியிலிருந்து அன்றைக்கு ரதம் ஓட்டிக் கொண்டு கண்ணபிரான் வந்தானே? அவன் ஒரு சமாசாரம் சொன்னான். என் பாட்டி எனக்குக் கலியாணம் பண்ணி வைப்பதற்காகப் பெண் பார்த்து வைத்திருக்கிறாள், உடனே வரச் சொன்னாள் என்று தெரிவித்தான். அப்புறம் காரியம் மிஞ்சிவிடப் போகிறது என்று உடனே போய்ப் பாட்டியிடம் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு வருவதற்காகக் காஞ்சிக்கு ஓடினேன். உங்களிடம் சொல்லிக் கொண்டு போகலாமென்று பார்த்தால், வீட்டில் உங்கள் இரண்டு பேரையும் காணவில்லை. ஒருவேளை தாமரைக் குளக்கரையில் இருப்பீர்களோ என்று ஓடிப்போய்ப் பார்த்தால், அங்கேயும் உங்களைக் காணவில்லை. இந்தப் புத்தபிக்ஷுதான் தாமரைக் குளக்கரையில் நின்று கொண்டிருந்தார்......" என்று சொல்லிக் குண்டோதரன் நாகநந்தியடிகளை ஏறிட்டுப் பார்த்தான்.

"என்னையா சொல்கிறாய், தம்பி! இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தில் புத்தபிக்ஷு நான் ஒருவன் தானா? வேறு யாரையாவது பார்த்திருப்பாய்!" என்றார் அடிகள்.

"இல்லை, சுவாமி! இல்லை. உங்களைத்தான் பார்த்தேன். கையிலே ஏழெட்டு ஓலைச் சுருள் வைத்துக் கொண்டு, ஒரு ஓலையைப் படித்துக் கொண்டிருந்தீர்கள். நாகப்பாம்பு சீறுவதைப்போல் சீறிக் கொண்டிருந்தீர்கள் ......"

சிவகாமியின் மனத்தில் அப்போது சுருக் என்றது. மரப் பொந்திலே அவள் வைத்திருந்த மாமல்லரின் ஓலைகள் காணாமற் போனது அவளுக்கு நினைவு வந்தது.

அப்போது நாகநந்தி "என்ன அப்பா, உளறுகிறாய்? நானாவது

தாமரைக் குளக்கரையில் நின்று ஓலை படிக்கவாவது?'' என்றார்.

ஆயனரும், ''வேறு யாராவது இருக்கும், குண்டோதரா! அப்புறம் உன் கதையைச் சொல்!'' என்றார்.

''இல்லை, குருவே! இவரையேதான் பார்த்தேன். அல்லது இவருடைய தலையை அன்றைக்கு யாராவது திருடி வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இவருடைய முகத்தையும் இவர் சீறுவதையும் பார்த்ததும் எனக்கு என்ன தோன்றிற்று தெரியுமா? — ஆ! அதைச் சொல்லக்கூடாது; சொன்னால், பிக்ஷுவுக்குக் கோபம் வரும். கோபம் வந்து என்னைக் கடித்தாலும் கடித்துவிடுவார்!'' என்றான்.

நாகநந்தியின் கண்களில் தீப்பொறி பறந்தது. ஆயனரோ நிலைமை விரஸமாய்ப் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்து, ''பாருங்கள், சுவாமி! இப்பேர்ப்பட்ட புத்திசாலி சிஷ்யனை வைத்துக்கொண்டு என்ன சிற்பவேலையைச் செய்வது? அதனால்தான் எட்டு மாதமாக நான் ஒன்றும் செய்யவில்லை.........போகட்டும், குண்டோதரா! அப்புறம் உன் கதையைச் சொல்லு! உன் பாட்டி பேசிவைத்த பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டாயா?......'' என்றார்.

''குருவே! நான் பண்ணிக் கொள்வேனா? நம்ம சிவகாமி தேவிக்கு இன்னும் கலியாணம் ஆகாமலிருக்கும் போது நான் பண்ணிக் கொள்வேனா? பாட்டியிடம் கண்டிப்பாய்ச் சொல்லி விட்டேன், 'பாட்டி, பாட்டி! நம்முடைய மகேந்திர சக்கரவர்த்தியின் குமாரர் மாமல்லர் எத்தனை எத்தனையோ ராஜாக்கள் பெண் கொடுப்பதாக வந்தும் இன்னும் கலியாணம் பண்ணிக் கொள்ளாமல் பிரம்மசாரியாயிருக்கிறார். என் குருநாதருடைய செல்வப் புதல்வி சிவகாமிக்கு இன்னும் கலியாணமாகவில்லை. அவர்கள் எல்லாம் அப்படி இருக்கும் போது எனக்கு மட்டும் கலியாணம் என்னத்திற்கு, பாட்டி? உனக்கு ஏதாவது கலியாணம் பார்க்கவேணுமென்றால், நீ வேணுமானால் பண்ணிக் கொள்; நான் கிட்ட இருந்து நடத்துகிறேன்' என்று சொன்னேன்......''

குண்டோதரன் இவ்வாறு கூறியதும், எல்லாரும் கொல் என்று சிரித்து விட்டார்கள். சிவகாமியின் அத்தையும் கூடச் சிரித்து விட்டு, ''என்னத்திற்காகச் சிரிக்கிறீர்கள்?'' என்று சிவகாமியைக் கேட்டாள்.

''குண்டோதரனுக்குக் கலியாணமாம்!'' என்றாள் சிவகாமி.

ஆயனர், ''சரி, தம்பி! நாங்கள் இங்கே கிளம்பி வந்தது உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டார்.

குண்டோதரன் சொல்கிறான்:— ''குருவே! பாட்டியிடம் அவசரமாகச் சொல்லிவிட்டு ஓட்டம் ஓட்டமாய் நமது வீட்டுக்கு வந்து பார்த்தால், வீடு பூட்டிக் கிடந்தது! 'நம்முடைய குருநாதரே நம்மைக் கைவிட்டு விட்டார். இனிமேல் கடவுள்தான் நமக்குத் துணை' என்று தீர்மானித்து அப்படியே மரத்தடியில் படுத்துத் தூங்கிப்போய் விட்டேன். அப்போது பாருங்கள்! கடவுளே பார்த்து அனுப்பியதுபோல் நமது குமார சக்கரவர்த்தியும் புதிய தளபதியும் அங்கே வந்து சேர்ந்தார்கள்......!''

''யார் வந்தது?'' என்று ஆயனர், சிவகாமி இரண்டு பேரும் ஏககாலத்தில் கேட்டார்கள்.

''மாமல்லரும் தளபதி பரஞ்சோதியாரும் வந்தார்கள். குதிரைமேல் வந்தார்கள்! ஆகா! குதிரை என்றால், அதுவல்லவா குதிரை?......''

''அப்புறம்?'' என்றார் ஆயனர்.

''அவர்களுக்குப் பின்னால் இன்னும் பல குதிரை வீரர்கள் வந்தார்கள், கண்ணபிரான் வெறும் ரதத்தை ஓட்டிக்கொண்டு வந்தான். 'அடாடா! நானாவது அந்த ரதத்தில் ஏறிக் கொண்டு வந்திருக்கலாமே?' என்று வருத்தமாயிருந்தது.''

''சரி, அப்புறம் என்ன நடந்தது?'' என்றார் ஆயனர்.

மாமல்லர் வந்தார் என்று கேட்டதும் சிவகாமிக்குத் தலை சுற்றியது. தேகமெல்லாம் நடுங்கியது. என்ன

வெல்லாமோ கேட்க வேண்டுமென்று உள்ளம் துடித்தது; உதடுகளும் துடித்தன.

எனினும், "யார் வந்தது?" என்று கேட்டதற்குப் பிறகு அவளுடைய வாயிலிருந்து வார்த்தை எதுவும் வரவில்லை. ஆனால், விஷயத்தைச் சொல்லாமல் குண்டோதரன் என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டிருந்ததில் அவளுக்குக் கோபமாய் வந்தது.

குண்டோதரன் சொல்கிறான்:— "குருவே! வீடு பூட்டிக் கிடந்ததைக் கண்டதும் எனக்கு எவ்வளவு கோபம் வந்ததோ அதைவிட மூன்று மடங்கு கோபம் நமது குமார சக்கரவர்த்திக்கு வந்துவிட்டது. அவரும் தளபதியும் பேசிக் கொண்டிருந்துதான் நீங்கள் சிதம்பரம் சாலையில் போய்க் கொண்டிருப்பீர்களென்று எனக்குத் தெரிந்தது. 'சிதம்பரம் சாலையில்தான் போய்க் கொண்டிருப்பார்கள். ஆள் அனுப்பி அழைத்து வரச் சொல்லலாமே!' என்று தளபதி சொன்னதற்கு, மாமல்லர் எவ்வளவு கோபமாய் மறுமொழி சொன்னார் தெரியுமா? 'நான் வரும் வரை இருக்கச் சொல்லியிருக்கும்போது எப்போது போனார்களோ, அப்போது அவர்களை அழைப்பது என்ன வந்தது? எங்கேயாவது போகட்டும்!' என்று சொல்லிவிட்டு, மாமல்லர் குதிரையைத் திருப்பி விட்டுக் கொண்டு போன வேகத்தைப் பார்க்க வேண்டுமே? அடே அப்பா! நமது குமார சக்கரவர்த்திக்கு இவ்வளவு மூக்குக்கு மேல் கோபம் வரும் என்பது எனக்குத் தெரியவே தெரியாது. குமார சக்கரவர்த்தியின் குதிரை திரும்பியதும், மற்றக் குதிரைகள் சடசடவென்று திரும்புவதற்குப் பட்ட பாட்டைப் பார்க்க வேண்டுமே?...... என்ன அவசரம்? என்ன தடபுடல்?.... நான் கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்து மரத்தின் பின்னாலிருந்து வெளியே வருவதற்குள் அவ்வளவு குதிரைகளும் காற்றாய்ப் பறந்து போய் விட்டன......"

ஆயனருக்கு இதெல்லாம் ஒரே திகைப்பாயிருந்தது. "எங்களை அங்கேயே இருக்கும்படி மாமல்லர் ஒன்றும் சொல்லி அனுப்பவில்லையே? ஏன், சிவகாமி! பரஞ்சோதி அப்படி ஏதாவது சொன்னானா, என்ன? 'இஷ்டப் பட்டால் காஞ்சிக்கு வாருங்கள்; இல்லாவிட்டால் சோழ தேசத்துக்குப் போங்கள்' என்று சக்கரவர்த்தி சொல்லியனுப்பியதாகத்தானே தெரிவித்தான்?" என்று ஆயனர் சிவகாமியை நோக்கிக் கேட்டார்.

"எனக்கு ஒன்றும் தெரியாது, அப்பா!" என்று சிவகாமி சொல்லிய போது அவளுடைய நாக்குழறிற்று.

அவளுடைய உள்ளத்தில் அப்போது மகிழ்ச்சி, பயம், கோபம், கவலை முதலிய உணர்ச்சிகள் ததும்பி, புயற்காற்று அடிக்கும்போது சமுத்திரம் கலங்குவதுபோல் கலங்கச் செய்து கொண்டிருந்தது.

மாமல்லர் தன்னைத் தேடி வந்தார் என்பதில் மகிழ்ச்சி; அவருக்கு வந்த கோபத்தைக் கேட்டதில் பயம்; அவர் வருவதற்கு முன்னால் கிளம்பும்படி செய்த நாக நந்தியின் மேல் கோபம்; செய்த தவறை எப்படித் திருத்துவது என்பது பற்றிக் கவலை; —இப்படிப்பட்ட பலவகை உணர்ச்சிகளுக் கிடையே ஒரே ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள அவளுக்கு ஆவல் துடி துடித்தது.

ஒருவாறு நெஞ்சை உறுதிப்படுத்திக்கொண்டு, "அப்பா! குண்டோதரன் சொல்வது எதுவுமே எனக்கு நிஜமாகத் தோன்றவில்லை. குமார சக்கரவர்த்தியாவது, நம் வீட்டுக்கு வரவாவது? அவர்தான் யுத்தத்துக்குப் பயந்து கொண்டு கோட்டையில் ஒளிந்து கொண்டிருந்தாரே?" என்றாள்.

ஆயனர் அதற்கு மறுமொழி சொல்லத் தெரியாதவராய், குண்டோதரனைப் பார்க்க, அவன், "குருவே! இப்படிப்பட்ட நாராசமான வார்த்தைகள் சிவகாமி அம்மையின் வாயிலிருந்துதானா உண்மையில் வெளி வந்தன? அதுதான் எனக்கு நிஜமாகத் தோன்றவில்லை. வீராதி வீரரான மகா மல்லராவது, யுத்தத்துக்குப் பயந்து கோட்டையில் ஒளிந்து கொண்டிருக்கவாவது? இப்பேர்ப்பட்ட கொடிய அவதூறை எந்தப் பாவி

சிவகாமி அம்மையின் காதில் போட்டது? சக்கரவர்த்தியின் கட்டளைக்காக வல்லவா மாமல்லர் இத்தனை நாளும் கோட்டைக் குள்ளே இருந்தார்? சக்கரவர்த்தியின் ஆக்ஞை வந்தவுடனே மாமல்லர் நேரே போர்க்களத்துக் கல்லவா போகிறார்?'' என்றான்.

"போர்க்களத்துக்கா? எந்தப் போர்க்களத்துக்கு?'' என்று ஆயனர் கேட்க, "தெரியாதா, குருவே? நாடு நகரமெல்லாம் அறிந்த விஷயமாயிற்றே? மகேந்திர சக்கரவர்த்தி வடபெண்ணைக் கரையில் முடக்கப்பட்டிருக்கும் தைரியத்தினால் கங்க நாட்டுத் துர்விநீதன் காஞ்சியின்மேல் படை யெடுத்து வரும் செய்தி தங்களுக்குத் தெரியாதா? அந்தக் கங்க நாட்டுச் சைன்யத்தை நிர்மூலமாக்கத்தான் மாமல்லர் போயிருக்கிறார்......?''

"என்ன? என்ன சொல்கிறாய்?'' என்று வியப்பும் திகிலும் கலந்த ஒரு குரல் கேட்டது. இத்தனை நேரமும் மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த நாகநந்தியின் குரல்தான் அது.

குண்டோதரன், நாகநந்தியை நோக்கி, "அடிகளே! நீங்கள் ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? தலைக்காட்டு ராஜா உங்களுக்கு ரொம்ப வேண்டியவனா, என்ன?'' என்று கேட்டுவிட்டு, ஆயனரைப் பார்த்து, "ஆமாம், குரு தேவரே! தலைக்காட்டு ராஜாவாகிய துர்விநீதன் என்னும் நீசன் மேற்குத் திக்கிலிருந்து காஞ்சி நகரின் மேல் படை எடுத்து வருகிறானாம். அவனையும் அவனுடைய படையையும் எதிர்த்துத் துவம்ஸம் செய்வதற்குத்தான் மாமல்லர் திருக்கழுக்குன்றத்திலிருந்த நமது தற்காப்புப் படையுடன் போயிருக்கிறார். சற்று முன்னால், இந்தச் சாலையில் ஒரு படை போயிற்றே, நீங்கள் பார்க்கவில்லையா? அந்தப் படை தென்பெண்ணைக் கரையிலே காவலுக்கு இருந்த படை; போர்க்களத்துக்குப் போகும் மாமல்லருடனே சேர்ந்து கொள்ளத்தான் போகிறது. இதை நீங்கள் விசாரித்துத் தெரிந்து கொள்ளவில்லையா?'' என்றான்.

வெகு சாதுவாகவும், பேசவே தெரியாத அசடாகவும் இத்தனை நாளும் தோன்றிய குண்டோதரன் இப்போது இவ்வளவு வாசாலகனாய் மாறியிருந்தது ஆயனருக்கு ஒரே ஆச்சரியத்தை அளித்தது. அவனிடம் இன்னும் ஏதோ அவர் கேட்கப் போனார். அச்சமயம், நாகநந்தி, கலக்கமடைந்த குரலில், "ஆயனரே! நன்றாய் இருட்டி விட்டதே? மிச்ச வழியையும் கடந்து இரவு தங்குவதற்கு அசோகபுரிக்குப் போய் விட வேண்டாமா? குண்டோதரன்தான் நம்முடன் வருகிறானே, எல்லா விவரங்களும் சாவகாசமாய் அவனிடம் கேட்டுக் கொண்டால் போகிறது!'' என்றார்.

உண்மையிலேயே அப்போது நன்றாய் இருட்டி விட்டிருந்தபடியால், நாகநந்தியின் முகத்தை யாரும் நன்றாய்ப் பார்க்க முடியவில்லை. பார்க்க முடிந்திருந்தால், அந்தக் கோரமான முகம் அப்போது இன்னும் எவ்வளவு சர்வ கோரமாகியிருக்கிறதென்று அறிந்து பயந்து போயிருப்பார்கள்.

ஆயனர் சிவகாமியைப் பார்த்து, "குழந்தாய்! அடிகள் கூறுவது உண்மைதான். வண்டியில் ஏறிக்கொள்! குண்டோதரனிடம் எல்லாம் பிறகு விவரமாய்க் கேட்கலாம்'' என்றார்.

சிவகாமியின் உள்ளத்தில் குண்டோதரனைக் கேட்பதற்கு எத்தனையோ கேள்விகள் தோன்றிக் கொண்டிருந்தன. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக அவள் ஒரு கேள்வி கேட்க விரும்பினாள். அதாவது, குண்டோதரனுக்குக் குதிரை எப்படிக் கிடைத்தது? — ஒரு வேளை குமார சக்கரவர்த்தியின் கோபம் தணிந்து, தங்களைப் போய்த் திருப்பி அழைத்து வருவதற்காக அவர்தான் குண்டோதரனுக்குக் குதிரை கொடுத்து அனுப்பியிருப்பாரோ என்று அவள் மனதிற்குள்ளே ஒரு சபல நினைவு தோன்றியிருந்தது.

எனவே, "அப்பா! அத்தை வண்டியில் ஏறிக் கொள்ளட்டும்; நான் சற்று நேரம் உங்களுடன் நடந்து வருகிறேன்'' என்றாள்.

அத்தியாயம் 22

குதிரை கிடைத்த விதம்

அத்தை வண்டியில் ஏறிக்கொண்டதும் வண்டி புறப்பட்டது. மற்றவர்கள் எல்லாம் பின்னால் நடந்து சென்றார்கள். குண்டோதரனும் குதிரையின் தலைக் கயிற்றைப் பிடித்து நடத்திக் கொண்டு தானும் நடந்து சென்றான்.

"அப்பா! குண்டோதரனுக்குக் குதிரை எப்படிக் கிடைத்தது; அவனைக் கேளுங்கள்!" என்றாள் சிவகாமி.

"குண்டோதரனுக்குக் குதிரை ஏறத் தெரியும் என்றே எனக்குத் தெரியாது. அம்மா! குண்டோதரா, நீ எப்போது குதிரை ஏற்றம் கற்றுக்கொண்டாய்?" என்று கேட்டார் ஆயனர்.

"குருவே! உலகத்தைத் துறந்து காவித் துணி புனைந்த புத்த பிக்ஷுக்கள்கூட இந்த நாளில் குதிரை ஏறுகிறார்களே! இந்தக் குதிரைகூட ஒரு



இளம் புத்த பிக்ஷு ஏறிக்கொண்டு வந்ததுதான். குருவே! பிக்ஷுவை ஏரியிலே தள்ளி விட்டு நான் குதிரை மேல் ஏறி வந்து விட்டேன்!" என்று குண்டோதரன் கூறிக் கலகல வென்று சிரித்தான்.

குண்டோதரன் சொல்லுவதெல் லாம் நாகநந்திக்குக் கோபம் ஊட்டு வதா யிருப்பதைக் கண்ட ஆயனர், "குண்டோதரா! இது என்ன? என்னுடைய பெயரை நீ ரொம் பவும் கெடுத்து விடுவாய் போலிருக் கிறதே! என்னுடைய சிஷ்யன் என்று பெயர் வைத்துக் கொண்டு இப்படியெல்லாம் செய்யலாமா? கொஞ்சமும் நன்று யில்லையே?" என்றார்.

சிவகாமி, "அப்பா! குண்டோ தரன் அப்படியெல்லாம் ஒன்றும் செய்திருக்க மாட்டான். வேடிக்கைக் காகச் சொல்கிறான்" என்றாள்.

"இல்லை, இல்லை! நிச்சயமாகத் தான் சொல்கிறேன். இங்கேயிருந்து இரண்டு காத தூரத்தில் சாலை ஓர மாக ஒரு ஏரி இருக்கிறதே. நீங்கள் பார்க்கவில்லையா? அந்த ஏரியிலே தான் பிக்ஷுவைத் தள்ளினேன்" என்றான் குண்டோதரன்.

நாகநந்தி பெரிதும் கலக்க மடைந்த குரலில் ஆயனருக்கு மட்டும் கேட்கும்படியாக, "என்ன நடந்தது என்று விவரமாய்க் கேளுங்கள்!" என்றார்.

ஆயனர் அவ்விதமே விவரமாய்ச் சொல்லும்படி கேட்டதின் மேல் குண்டோதரன் சொன்னான்:—"உங் களை வீட்டில் காணாமல், 'அடாடா! நம்முடைய குரு இப்படி நம்மைக் கை விட்டுவிட்டுப் போய் விட்டாரே?' என்று நான் கவலையுடன் மரத்தடி யில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந் தேன். பல குதிரைகள் வரும் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டு மரத்தின் மறைவிலிருந்தபடி பார்த் தேன். அப்போதுதான் மாமல்லரும் தளபதி பரஞ்சோதியும் பேசியது என் காதில் விழுந்தது. அவர்கள் அவசரமாய்த் திரும்பிப் போய்விட் டார்கள். 'அடாடா! இவ்வளவு குதிரைகளில் நமக்கு ஒரு குதிரை கிடைத்தால் நமது குருவைப் போய்ப் பிடித்து விடலாமே? கால் நடை யாகப் போய்ப் பிடிக்க முடியுமா?' என்று நான் கவலைப்பட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கையில், ஒரு இளம் புத்த பிக்ஷு சற்றுத் தூரத்திலிருந்த இன்னொரு மரத்தடியின் மறைவி லிருந்து வெளியே வந்தார். மாமல் லரும் தளபதியும் என்ன பேசிக் கொண்டார்கள் என்று என்னைக் கேட்டார். நான் சொன்னேன். அப்புறம் என்னைப் பற்றிக் கேட் டார். நான் ஆயனச் சிற்பியாரின் சீடன் என்று தெரியப்படுத்தினேன். அந்த வீட்டுக்கு நாகநந்தி அடிகள் வந்திருந்தாரா என்று கேட்டார். அப்போது தாமரைக் குளக்கரையில் இந்த அடிகளைப் பார்த்த நினைவு எனக்கு வந்தது. 'அவர் பெயர் என் னமோ, எனக்குத் தெரியாது. ஆனால் நாகத்தைப் போல் முகமுடைய ஒரு பிக்ஷுவைத் தாமரைக் குளக்கரை யில் கண்டேன்' என்றேன். இளம் பிக்ஷு சற்று நேரம் யோசித்து விட்டுக் கிளம்பினார். வழித் துணை கிடைத்தது என்ற சந்தோஷத்துடன் அவருடன் நானும் கிளம்பினேன். ஆனால் அந்த இளம் பிக்ஷு என்னை ஏமாற்றி விட்டார். கொஞ்ச தூரம் போனதும், காட்டின் மறைவில் கட்டியிருந்த இந்தக் குதிரைமேல் ஏறிக்கொண்டு என்னிடம் சொல்லிக் கொள்ளக்கூடச் செய்யாமல் வேக மாய்ப் போய் விட்டார். ஆகா! யாரை நம்பினாலும் நம்பலாம், புத்த பிக்ஷுக்களை மட்டும் நம்பக்கூடாது! இதோ நம்முடன் வரும் அடிகள் நீங்கலாகச் சொல்கிறேன்" என்றான் குண்டோதரன்.

ஆயனர், "குண்டோதரா! பெரி யோர்களாகிய புத்த பிக்ஷுக்களைப் பற்றி அப்படியெல்லாம் தூஷணை சொல்லாதே! பிறகு நீ என்ன செய் தாய் என்று சொல்லு!" என்றார்.

"நானா? நான் என்ன செய்வது, குருவே! 'நமக்குக் குதிரை இல்லாமற் போனால் போகட்டும்; கடவுள் கொடுத்த இரண்டு கால் இருக்கிற தல்லவா?' என்று எண்ணிக்கொண்டு கிளம்பினேன். இரண்டு நாள் பிரயாணம் செய்ததில் கால்வலி கண்டு இன்று மத்தியானம் ஏரிக்

கரையில் சாலை ஓரமாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது, பாருங்கள். அதே இளம் பிக்ஷு குதிரைமேல் வந்தார். 'அடிகளே! இதென்ன, எனக்கு முன்னால் கிளம்பினீர்கள்; பின்னால் வருகிறீர்களே?' என்று கேட்டேன். என்னைப் பார்த்ததில் அவருக்கு அதிக ஆச்சரியமாய்ப் போய்விட்டது. 'ஆமாம், அப்பா! இந்தக் காலத்தில் காலநடைப் பிரயாணத்தைவிடக் குதிரைப் பிரயாணம்தான் அதிக ஆபத்தா யிருக்கிறது. பல்லவ ராஜாங்கம்தான் தரித்திரம் பிடித்த ராஜாங்கமா யிருக்கிறதே? எங்கேயாவது குதிரையைக் கண்டால் யுத்தத்துக்கு வேண்டுமென்று கைப்பற்றிக் கொள்கிறார்களாமே? அதற்காகப் பயந்து பயந்து வரவேண்டியதா யிருந்தது!' என்றார். அப்புறம் பிக்ஷு குதிரை மேலும் நான் கால் நடையாகவும் கொஞ்ச தூரம் வந்தோம். அப்போது பிக்ஷு அடிக்கடி 'தாகமா யிருக்கிறது' 'தாகமா யிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே வந்தார். அவர் மேல் எனக்கு ரொம்பவும் பரிதாபம் உண்டாகி விட்டது. 'அடிகளே! இந்தத் திவ்யமான ஏரியில் தண்ணீர் குடித்துத் தாகம் தணித்துக் கொள்ளுங்களேன்!' என்று சொல்லி, அவரைக் குதிரை மேலிருந்து ஒரு தள்ளுத் தள்ளினேன். பிக்ஷு ஏரியில் விழுந்தார். அடாடா! என்ன ஆனந்தமாக அவர் ஏரித் தண்ணீரைக் குடித்தார் தெரியுமா?...''

இதைக் கேட்ட சிவகாமியினால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. ஆயனர், ''அம்மா, இதென்ன அசந்தர்ப்பமான சிரிப்பு?'' என்று அதட்டிவிட்டு, ''அட பாவி! அப்புறம் என்ன செய்தாய்?'' என்று குண்டோதரனைப் பார்த்துக் கேட்டார்.

''குருவே! பாவி என்கிறீர்களே! புத்த பிக்ஷுவுக்குத் தண்ணீர் கொடுத்துத் தாகத்தைத் தணிப்பது கூடப் பாவமா?......''

''அப்புறம் என்ன செய்தாய், சொல்!'' என்று ஆயனர் கடுமையான குரலில் கேட்டார்.

''என்ன செய்தேனா? பிக்ஷுவுக்கு நீந்தத் தெரியாதென்று தெரிந்ததும், கரையிலே கிடந்த அவருடைய மேல் வஸ்திரத்தை எடுத்து, அதன் ஒரு முனையைக் கரையிலிருந்த மரத்தின் வேரில் கட்டினேன். இன்னொரு முனையை அவர் பிடித்துக் கொண்டதும், 'பிக்ஷுவே! மெதுவாகக் கரையேறி வந்து சேருங்கள்! நான் போகிறேன்!' என்றேன். அப்போது அவர், 'ஐயோ! ஓலை! ஓலை!' என்று அலறினார். 'என்ன ஓலை?' என்று கேட்டேன். 'நாகநந்திக்குக் கொண்டு வந்த ஓலை! கரையிலே கிடக்கிறதா, பார்!' என்றார். கரையிலே பார்த்தேன். ஒரு ஓலை கிடந்தது. அதை எடுத்து அவருக்குக் காட்டி, 'ஓலை பத்திரமா யிருக்கிறது. கவலை வேண்டாம். உங்களை மறுபடி பார்க்கும்போது கொடுக்கிறேன்' என்று சொல்லிவிட்டுக் குதிரைமேல் ஏறிக் கொண்டேன். அவ்வளவுதான்; இங்கே வந்து சேர்ந்தேன்'' என்று குண்டோதரன் முடித்தான்.

அப்போது, சொல்ல முடியாத குரோதம் நிறைந்த குரலில், நாகநந்தி, ''ஆயனரே! உமது சீடனிடமிருந்து ஓலையை வாங்கும்!'' என்றார்.

ஆயனரும் கலக்கத்துடன், ''குண்டோதரா! என் பெயரைக் கெடுக்கவா நீ என் சீடனானாய்? நல்ல காரியம் செய்தாய்! போகட்டும். இவர்தான் நாகநந்தியடிகள். அந்த ஓலையைக் கொண்டு வந்திருக்கிறாயா? இப்படிக் கொடு!'' என்றார். ''குருவே! அப்படியா? நான் நினைத்தது நிஜமாய்ப் போயிற்றே? இவர்தானா நாகநந்தியடிகள்! சுவாமி! இதோ ஓலை!'' என்று குண்டோதரன் நாகநந்தியடிகளிடம் ஓலையைக் கொடுத்தான். அதை அவர் மௌனமாக வாங்கிக் கொண்டு, சாலை மரங்களின் வழியாக வந்து கொண்டிருந்த நிலாக் கிரணங்களின் உதவியினால் படிக்க முயன்றார். ஆனால் படிக்க முடியவில்லையென்று தெரிந்தது.

பிக்ஷுவின் நடை முன்னைக் காட்டிலும் வேகத்தை யடைந்தது. அந்தச் சாலையில் வண்டிச் சத்தத்தையும் குதிரை யடிச் சத்தத்தையும் மனிதர் காலடிச் சத்தத்தையும் தவிர மற்றப்படி நிச்சப்தம் குடி கொண்டது.

யவக்கிரீதன் கதை

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

லோமசருடன் பாண்டவர்கள் பல தீர்த்தங்களுக்கு யாத்திரை போன காலத்தில் ரைப்யருடைய ஆசிரமம் என்று வழங்கும் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

"அதோ பார், கங்காதீரம்" என்றார் லோமசர்.

"இதுதான் தசரத குமாரன் பரதன் ஸ்நானம் செய்த இடம். இந்தத் தீர்த்தத்தில்தான் இந்திரன் விருத்திரனை அதர்ம வழியில் கொன்றதனால் அடைந்த பிரம்மஹத்திப் பாவம் கழுவப்பட்டது. சனத்குமாரர் சித்தியடைந்த க்ஷேத்திரமும் இதுவே. தேவர்களின் தாயான அதிதி புத்திரப் பேறு பெற இந்த மலையில்தான் பொங்கல் வைத்தாள். யுதிஷ்டிரனே! இந்தப் புண்ணிய மலைமேல் ஏறி, உங்களுடைய புகழுக்கு வந்த இடையூறுகளை யெல்லாம் போக்கிக் கொள்ளுங்கள். இங்கே ஓடும் கங்கையில் நீராடினால் ஆணவமும் குரோதமும் நீங்கும்" என்று லோமசர் பாண்டவர்களுக்கு அந்த இடத்தின் மகிமையை விளக்கிச் சொன்னார்.

* * *

"ரிஷி புத்திரனான யவக்கிரீதன் இவ்விடத்தில்தான் நாசமடைந்தான்" என்று கதையைச் சொல்லுகிறார் :

பரத்வாஜர், ரைப்யர் என்ற இரண்டு பிராமண சிரேஷ்டர்கள் வனத்தில் ஆசிரமங்கள் அமைத்துக் கொண்டு இருந்தார்கள். இருவரும் மிக நெருங்கிய சிநேகிதர்கள். ரைப்யரும் அவருடைய குமாரர்களான பராவசு, அர்வாவசு என்கிற இருவர்களும் நன்றாக வேதம் ஓதி, பெரிய வித்துவான்களாகப் புகழ் பெற்றார்கள். பரத்வாஜர் தவத்திலேயே தன் நேரத்தை யெல்லாம் கழித்து வந்தார். பரத்வாஜருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் யவக்கிரீதன். பிராமணர்கள் வித்துவானான ரைப்யரை மதிப்பதுபோல் தன்னுடைய பிதாவை மதிக்கவில்லை யென்பதை யவக்கிரீதன் கண்டான். ரைப்யரும் அவர் குமாரர்களும் தங்கள் கல்வியின் பயனாக ஜனங்களிடம் அதிகமான மதிப்பைப் பெற்றிருப்பதைப் பார்த்து யவக்கிரீதன் பொறாமைப் பட்டுத் துயரம் அடைந்தான்.

* * *

யவக்கிரீதன் இந்தக் குறையைத் தீர்த்துக்கொள்ள இந்திரனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தான். நெருப்பில் தன் தேகத்தை வாட்டி, தேவராஜனுக்குச் சந்தாபம் உண்டாக்கினான். மனிதர்கள் தவம் செய்து உடலை வாட்டிக் கொள்ளுவது தேவர்களை வாட்டித் துன்புறுத்தும். யவக்கிரீதனுடைய கடுந் தவத்தைக் கண்டு தேவராஜன் இரங்கி, "ஏன் இந்தக் கோரமான தவம்?" என்றான்.

"பிராமணர்கள் இதுவரையில் ஓதியிராத வேதங்கள் எல்லாம் எனக்கு வர வேண்டும். நான் பெரிய வித்துவானாக வேண்டும். அதற்காக இந்தத் தவம் செய்கிறேன். குருவின் வாயால் நீண்ட காலம் ஓதிக் கஷ்டப்பட்டு வேதங்களை அடைய வேண்டியதாயிருக்கிறது. அவ்வாறு இல்லாமலே அடைய நான் தவம் செய்கிறேன். எனக்கு அருள்வாயாக" என்றான் யவக்கிரீதன்.

இந்திரன், "பிராமணனே! நீ வழியில்லாத வழியில் செல்லுகிறாய். போய்த் தகுந்த குருவை நாடிக் கற்றறிந்து வேதங்களை அடைவாயாக" என்று சொல்லிவிட்டு மறைந்தான்.

பரத்வாஜ புத்திரன் விடவில்லை. இன்னும் மிகக் கோரமான முறையில் தவம் செய்தான். அதனால் தேவர்கள் மிகவும் துன்புறுத்தப் பட்டார்கள். இந்திரன் மறுபடியும் வந்து யவக்கிரீதனைப் பார்த்து, "நீ சரியாக ஆராய்ந்து விஷயத்தை அறிந்து கொள்ளாமல் இந்தக் காரியத்தில் பிரவேசித்திருக்கிறாய். உன் தகப்பனுக்கு வேதம் தெரியும். உன்னாலும் ஓத முடியும். போய்க் கற்றுக்கொண்டு வேதங்களை அடைவாயாக. உடலை வாட்டித் தவம் செய்வதை நிறுத்து" என்றான்.

இவ்வாறு இந்திரன் இரண்டாம் முறை சொன்னதையும் யவக்கிரீதன் கேட்கவில்லை. "என்னுடைய விருப்பத்தை நீ செய்யாமல் போனால் என்னுடைய சரீர அங்கங்களை ஒவ்வொன்றாக வெட்டி நெருப்பில் போட்டு ஹோமம் செய்யப் போகிறேன், விடுவதில்லை" என்றான்.

* * *

அவ்வாறே கடுந்தவம் செய்தான். ஒரு நாள் காலை கங்கையில் ஸ்நானம் செய்யப் போனான். அங்கே நோய்ப் பட்டு மெலிந்திருக்கும் ஒரு வயோதிகப் பிராமணன் கங்கைக் கரையில் உட்கார்ந்துகொண்டு பிடிப் பிடியாக மணலை எடுத்துத் தண்ணீரில் போட்டுக் கொண்டிருந்தான்.

"என்ன செய்கிறாய், கிழவா?" என்று கேட்டான் யவக்கிரீதன்.

"கங்கையைத் தாண்டச் சேது ஒன்று கட்டுகிறேன். இங்கே நதிக்குக் குறுக்காக ஒரு மணற் சேது கட்டிவிட்டால் ஜனங்களுக்குச் சௌகரியமாக இருக்கும். இப்போது கங்கையைத் தாண்டிப் போக ரொம்பக் கஷ்டப் படுகிறார்கள். ஆகையால் இந்தக் காரியத்தில் இருக்கிறேன்" என்றான் அந்தக் கிழவன்.

யவக்கிரீதன் நகைத்து, "ஓடும் ஆற்றை இம்மாதிரி தடுத்துச் சேதுவை உண்டாக்க முடியாது. எழுந்து வேறு காரியம் செய்" என்றான்.

"தாங்கள் வேதங்களை ஓதாமலே வேதங்களை அடையப் பெருந் தவம் செய்கிறீர்கள் அல்லவா? அவ்விதமே நானும் கங்கைக்குச் சேதுவைக் கட்ட முயற்சி செய்கிறேன்" என்றான் கிழவன்.

* * *

யவக்கிரீதனுக்குக் கிழவன் யார் என்று இப்போது தெரிந்துவிட்டது.

"தேவராஜனே, என்னுடைய முயற்சி வீண் என்று நீ எண்ணுவதாயிருந்தால், எவ்வாறு நான் வித்துவான் ஆவேனோ, அவ்வாறு எனக்கு வரம் தருவாயாக" என்று மறுபடியும் யவக்கிரீதன் இந்திரனை வருந்தி வேண்டினான்.

"சரி; வரம் தந்தேன். போய் வேதங்கள் அத்தியயனம் செய், நீ வித்துவான் ஆவாய்" என்று இந்திரன் யவக்கிரீதனைத் திருப்தி செய்தான்.



* * *

யவக்கிரீதன் வேதம் ஓதிப் பாண்டித்தியமும் அடைந்தான். "நான் இந்திரனிடம் வரம் பெற்று வேதங்களை அடைந்தேன்" என்று மிகுந்த கர்வம் கொண்டவனாக அலைந்தான். பரத்வாஜருக்கு இது பிடிக்கவில்லை.

"பிடிவாதத் தவம் செய்யும் அற்பர்களுக்கும் தேவர்கள் வரங்களைக் கொடுப்பார்கள். அதனால் அவர்கள் அடக்கத்தை இழந்து மதிமயங்கிப் போய்ச் சீக்கிரமே அழிந்து போவார்கள்" என்று பரத்வாஜர் மகனுக்குச் சொன்னார். இந்த உண்மைக்குப் புராணக் கதை ஒன்றை யவக்கிரீதனுக்கு உதாரணமாகவும் சொன்னார்.

* * *

முன்னொரு காலத்தில் பாலதிஷி என்ற ஒரு புகழ் பெற்ற ரிஷி இருந்தார். அவருக்கு ஒரு குமாரன் இருந்தான். அவன் இறந்துவிட்டதைப் பார்த்து ரிஷியானவர் சோகத்தால் வருந்தி, சாகாத ஒரு மகனை அடைய வேண்டும் என்று பெருந் தவம் செய்தார்.

"மனித ஜாதி சாகாத வரம் பெற முடியாது. ஆயுளுக்கு ஒரு வரம்பு இருக்கத்தான் இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு வரம்பு உம் இஷ்டப்படி நீரே வைத்துக் கேளும்" என்று தேவர்கள் ரிஷிக்குச் சொல்ல, அவரும், "சரி, அப்படியானால் அதோ அந்த மலை இருக்கும் வரையில் என் மகனுடைய உயிரும் இருக்கக் கடவது" என்றார். அவ்வாறே வரம் பெற்றார்.

பிறகு அவருக்கு ஒரு மகன் உண்டானன். அவன் பெயர் மேதாவி. தன்னுடைய உயிருக்கு அபாயமே இல்லை, மலைபோல் ஸ்திரமாக இருக்கலாம் என்று அவன் கர்வம் கொண்டான்.

ஒருநாள் இந்தத் துஷ்டன் தனுஷாக்ஷர் என்கிற மகாத்மாவினிடம் அபசாரமாக நடந்து கொண்டான். அவர் உடனே, "நீ சாம்பலாவாய்!" என்று சாபமிட்டார்.

ரிஷி குமாரனை மேதாவியோ ஒரு விதத்திலும் துன்பம் அடையாமல் ஆரோக்கியமாகவே நின்ருன். இதைக் கண்டு வியப்படைந்த பெரியவருக்கு இவன் பெற்றிருந்த வரத்தைப் பற்றி நினைவு வந்தது.

"அப்படியா?" என்று தனுஷாக்ஷர் தன்னை ஒரு காட்டெருமையாகச் செய்து கொண்டு தன்னுடைய தவ வன்மையால் மலையை முட்டி உடைத்தார். மேதாவியின் ஆயுள் தீர்ந்து அவன் இறந்து கீழே விழுந்தான்.

* * *

"இந்தப் புராணக் கதையிலிருந்து அறிவு பெறுவாயாக. வரங்களைப் பெற்று கர்வப்பட்டு அழிந்து போக வேண்டாம். அடக்கத்துடன் இருப்பாயாக. மகான் ரைப்யரிடம் போகாதே" என்று பரத்வாஜர் யவக்கிரீதனுக்கு எச்சரிக்கை செய்தார்.

* * *

வசந்த காலம். மரங்களும் கொடிகளும் எல்லாம் அழகிய மலர்கள் நிறைந்து வனம் சோபித்தது.

உலகமெல்லாம் மன்மதன் வசமாக இருந்தது. ரைப்யருடைய ஆசிரமத்தில் புஷ்பித்த செடிகளின் மத்தியில் பராவசுவின் மனைவி ஒரு கின்னர ஸ்திரீயைப் போல் தனியாக நடந்து கொண்டிருந்தாள். அச்சமயம் யவக்கிரீதன் அவ்விடம் வந்து அவள் வடிவத்தைப் பார்த்து மன மாறுதலையடைந்தான்.

காமத்தால் மதியிழந்த யவக்கிரீதன், "அழகியே! இங்கே வா!" என்று அவளை அழைத்தான். வியப்பும் வெட்கமும் அடைந்த அவள், ரிஷி புத்திரனுடைய சாபத்துக்குப் பயந்து அவன் சொன்னபடியே அவன் நின்ற இடத்திற்குச் சென்ருள். அவன் அவளைத் தனி இடத்துக்கு அழைத்துச் சென்று காம மயக்கத்தால் தூண்டப்பட்டு அவளுக்கு வெட்கம் உண்டாகும்படி நடந்து கொண்டான்.


* * *

ரைப்யர் ஆசிரமத்துக்குத் திரும்பி வந்தார். நடந்த நிகழ்ச்சியால் துன்புறுத்தப்பட்டு அழுது கொண்டிருந்த மருமகளைப் பார்த்து, "ஏன் அழுகிருய்? என்ன நடந்தது?" என்று விசாரித்தார். நடந்த அவமானத்தைச் சொன்ஞள். ரைப்யர் கோபாவேசமாகி, தன் தலையிலிருந்து ஒரு ரோமத்தை பிய்த்து அக்கினியில் மந்திரம் சொல்லிப் போட்டார்.

அவருடைய மருமகளுடைய அழகுக்குச் சமான வடிவம்கொண்ட ஒரு பெண்ணுருவம் ஹோமத் தீயிலிருந்து கிளம்பிற்று. மறுபடியும் ஜடையிலிருந்து ஒரு ரோமத்தை எடுத்து ஹோமம் செய்தார். அதன் பயனுக ஒரு பயங்கரமான பூதம் நெருப்பி லிருந்து கிளம்பிற்று. இந்த இரண்டு உருவங்களையும் பார்த்து ரைப்யர், "போய் யவக்கிரீதனை வதம் செய்யுங்கள்" என்று நியமித்தார். "அப்படியே!" என்று அந்த இரு பூதங்களும் சென்றன.

* * *

காலைக்கடன் கழித்துக் கொண்டிருந்த யவக்கிரீதனருகில் பெண் பூதம்



"இதோ பார்: பையன்களெல்லாம் விடியற்காலம் எழுந்து பரீட்சைக்குப் படிக்கணும். நாலு மணிக்கு அலாரம் வைத்திருக்கிறேன். மணி அடித்ததும் நீ எழுந்து பையன்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிடணும்."

அலாரம் அடித்ததில் பையன்களெல்லோரும் எழுந்து விட்டார்கள். ஆனல் வேலைக்காரன் மட்டும் நிம்மதியாய்த் தூங்குகிருன்!

சென்று அவனை ஏமாற்றி அவன் கமண்டலத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டது. அச் சமயத்தில் ஆண் பேய் சூலத்தைக் கையில் ஓங்கி ரிஷி குமாரன் மேல் பாய்ந்தது. யவக்ரீதன் பயந்து எழுந்தான். அசுத்த நிலையில் தன் மந்திரங்கள் உதவமாட்டாது என்று அறிந்து, கமண்டலம் எடுக்கப் போனான். அது இல்லாததைக் கண்டு தண்ணீர் இருக்கும் குளத்தைத் தேடி ஓடினான். குளம் வற்றிக் கிடந்தது. பக்கத்திலிருந்த ஓடைக்குச் சென்றான். அதுவும் வற்றிக் கிடந்தது. இவ்வாறே எங்கு சென்றாலும் தண்ணீர் கிடைக்க வில்லை. பயங்கரத் தோற்றத்துடன் பூதம் துரத்திக் கொண்டே வந்தது. எங்கும் தண்ணீர் காணாமல் அரக்கனால் துரத்தப்பட்டு ஓடிய யவக்ரீதன், கடைசியாகத் தன் தகப்பனாருடைய அக்னி ஹோத்தர சாலைக்குள் புகுந்து, தப்பித்துக் கொள்ளப் பார்த்தான். சாலை வாயிலில் இருந்த காவலாள் அரைக் குருடன். பயந்து கத்திக் கொண்டு ஓடிவரும் யவக்ரீதனுடைய அடையாளம் தெரிந்து கொள்ளாமல் யாரோ என்று தடுத்தான். இதற்குள் அரக்கன் வந்து யவக்ரீதனைச் சூலத்தால் குத்திக் கொன்றான்.

* * *

பரத்வாஜர் ஆசிரமத்தை நோக்கி வந்த போது யக்ஞ சாலை வழக்கம் போல் ஜொலிக்கவில்லை. வாயிலில் குத்துண்டு உயிர் நீங்கிக் கிடக்கும் மகனையும் பார்த்தார்.

"ஐயோ! என் பிள்ளாய்! உன் கர்வத்தால் மாண்டாயா? பிராமணர்கள் யாரும் ஓதாத வேதங்களை நீ வரமாகப் பெற்றது ஒரு பெரும் தவறல்லவோ! நீ ஏன் இதற்காகச் சபிக்கப் பட்டாய்? என் ஒரே புத்திரனை நான் இழக்கச் செய்த அந்த ரைப்யர், அவருடைய இரு குமாரர்களில் ஒருவனால் கொல்லப்பட்டு மாள்வாராக" என்று புத்திர சோகத்தினாலும் கோபாவேசத்தினாலும் விசாரியாமல் சாபமிட்டார்.

பிறகு உடனே தெளிவு அடைந்து, "ஹா! புத்திரனைப் பெறுதவர்களே புண்ணியவான்கள். பெற்ற புத்திரனை நான் இழந்தேன். தோழனையும் சபித்தேன்! நான் உயிருடன் இருந்து என்ன பயன்?" என்றார். மகனுடைய பிரேதத்தைத் தகனம் செய்து அந்தத் தீயில் தானும் புகுந்து உயிர் நீத்தார்.

தங்கையின் வெற்றி

சாவி

காலைக் கதிரவனுடைய செக்கச் சிவப்பான கிரணங்கள் முல்லைக்கொடி ஜமீன் மாளிகையைத் தங்க ரதம்போல் பிரகாசிக்கச் செய்தது. ஜமீன் மாளிகையைச் சேர்ந்த நந்தவனமும், நந்தவனத்திலிருந்த இளங் கொடிகளும், மாந்தளிர்களும், ரோஜா இதழ்களும் சூரியோதய அழகில் கலந்து மனோரம்யமாகக் காட்சி அளித்தன. மரக் கிளைகளில் பக்ஷி ஜாலங்கள் பரவசமாய்ப் பாடிக் கொண்டிருந்தன.

இந்த சௌந்தர்யக் காட்சிகளைக் கண்டு களிக்க ஜமீன் மாளிகையினின்று சகுந்தலை மானைப் போல் துள்ளிக் குதித்துத் தோட்டத்துக்குள் ஓடி வந்தாள். அவளைக் கண்டதும், நந்தவனத்தில் இரவெல்லாம் தனியாய்ப் படுத்துக் கிடந்த பால்மணம் மாறாத மான் குட்டி ஒன்று எழுந்து நின்று, தன்னுடைய மான் விழிகளால் நந்தவனத்தின் நாலா திசைகளையும் உற்று நோக்கியது.

அப்பொழுது தோட்டத்துப் பக்கமாக வந்த அவளுடைய தகப்பனார், "சகுந்தலை!" என்று அவளை அன்புடன் அழைத்தார். அவள் மானைத் தடவிக் கொண்டே திரும்பிப் பார்த்தவளாய், "ஏன் அப்பா!" என்றாள்.

"பொழுது விடிவதற்குள் தோட்டத்தில் என்ன அம்மா செய்கிறாய்?"

"மான் குட்டியைப் பார்க்க வந்தேன், அப்பா!" என்று கொஞ்சும் குரலில் கூறினாள் சகுந்தலை.

○

முல்லை வனம் ஜமீன்தார் தம்முடைய மகள் சகுந்தலையை அருமையாய் வளர்த்து வந்தார். சகுந்தலை தாயில்லாப் பெண். அவளுக்கு வயது ஒன்பதுதான். பாட்டியும் வீணையும் கற்றுக் கொள்ளும் நேரம் தவிர, சகுந்தலையை நந்தவனத்தில் மான்குட்டியுடன்தான் காண முடியும்.

சகுந்தலையும் மான் குட்டியும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ப் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வந்தார்கள். பிறந்து நாலு தினங்கள்கூட ஆகாத முன்பே கொண்டுவந்த மான்குட்டியாதலால் முதலில் ஒரு வாரம் வரையில் அது தாயைப் பிரிந்த சோகத்தில் சோர்ந்து படுத்துக் கிடந்தது. சகுந்தலையைக் கண்டால் பயந்து தேகத்தை ஒடுக்கிக் கொண்டது. அவள் ஆவலுடன் அதைத் தூக்கிக் கையில் வைத்துக் கொள்ள வரும்போது மருண்டு அரண்டது. தன் தாயினிடமிருந்து பிரிக்கப்பட்ட இளம் குட்டிக்கு மனதில் எத்தனை வேதனையோ? ஒன்றுமறியாத இளம் உள்ளம் படைத்த சகுந்தலைக்கு மான் குட்டியின் மனோ வேதனையை அறிந்து கொள்ளுதல் எப்படிச் சாத்தியமாகும்?

சகுந்தலை மான் குட்டிக்குப் பாலும் தேனும் கலந்து வைப்பாள். பசும் புற்களைப் பிடுங்கி, அதன் வாய்க்குள் திணித்து மகிழ்வாள். நெற்றியில் குங்குமப் பொட்டிட்டு, கழுத்தில் விதம் விதமான வர்ண மலர்களை மாலையாகத் தொடுத்துப் போட்டுத் தூரத்தில் நின்று அழகு பார்ப்பாள். "லக்ஷ்மி!" என்று அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் விடுவாள். அதன் காலில் சலங்கையைக் கட்டுவாள். சலங்கை சத்தம் கேட்டு அது மருண்டு ஓடுவதைக் கண்டு கல கலவென்று சிரிப்பாள்.

ஒரு நாள் சகுந்தலை தன்னுடைய இரண்டு கரங்களாலும் மான் குட்டியின் முகத்தைத் தடவிக் கொஞ்சும் போது, அதன் மண்டையில் இரண்டு பக்கமும் ஏதோ இலேசாக உறுத்துவதைப் போல் இருந்தது. அது என்னவென்று புரியாதவளாய்ப் பரபரப்புடன் அரண்மனைக்குள் ஓடி வந்து, "அப்பா, குட்டியின் தலையில் ஏதோ உறுத்துகிறதே, அது என்ன அப்பா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"அதுவா, அம்மா! மான் குட்டிக்குக் கொம்பு முளைக்கப் போகிறது! அதுதான் அப்படி உறுத்துகிறது" என்று

கூறினார் ஜமீன்தார். சகுந்தலையின் நீளமான நயனங்கள் ஆச்சரியத்தால் அகன்றன!

சகுந்தலைக்கு வயது பதின்மூன்று ஆனதும் ஜமீன்தார் அடிக்கடி பெருமூச்சுவிட ஆரம்பித்தார். "அவளுக்கு ஏற்ற புருஷன் வாய்க்க வேண்டுமே; அவள் நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டுச் சீரும் சிறப்புமாயிருக்க வேண்டுமே!" என்றுதான் அவர் கவலைப் பட்டார். அப்பாவின் மனக்கவலையை அறியாத சகுந்தலை, "அப்பா, ஏன் இப்படி அடிக்கடி பெருமூச்சு விடுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"அம்மா, உன்னை ஒரு நல்ல இடம் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமே என்றுதான் கவலைப்படுகிறேன்" என்றார் ஜமீன்தார்.

"ஐயோ, அப்பா! நான் மாட்டேன்; உங்களை விட்டு நான் ஒரு நாளும் பிரிய மாட்டேன். லக்ஷ்மியையும் நந்தவனத்தையும் விட்டா என்னைப் போகச் சொல்கிறீர்கள்? அப்படிப்பட்ட கல்யாணம் எனக்கு வேண்டியதேயில்லை" என்று ஒரே பிடிவாதம் பிடித்தாள் சகுந்தலை.

அவளுடைய மனோ ராஜ்யத்தில் அந்த மான் குட்டியைத் தவிர்த்து வேறு யாரும் இடம் பெறவில்லை.

அவளுக்கு எதிராகப் பிடிவாதம் பிடிக்க மனமில்லாத ஜமீன்தார், சமயம் நேரும் போதெல்லாம் சகுந்தலைக்கு அவளுடைய மண விஷயமாய் ஹிதோபதேசங்கள் செய்ய ஆரம்பித்தார். புராணங்களிலிருந்தும் இதிகாசங்களிலிருந்தும் கதைகளைச் சொல்லி அவற்றில் வரும் கன்னிப் பெண்மணிகள் அடைந்த சுக சௌபாக்யங்களைப் பற்றி விளக்கிக் கூறினார்.

"ஐயோ, சீதையின் வாழ்க்கையைக் கெடுக்க வந்த பொன் மானைப்போல் அல்லவா என் அருமைப் புதல்வியின் வாழ்க்கையைக் கெடுக்க இந்த மான் குட்டி வந்து சேர்ந்தது?" என்று வருந்தினார் ஜமீன்தார்.

"சகுந்தலை! கடவுள் பெண்களையும் ஆண்களையும் சிருஷ்டித்தது எதற்கு? அழகையும் ரூபத்தையும் படைத்தது எதற்கு? பால்யம் விருத்தாப்பியம் என்ற நியதிதான் என்னத்திற்கு? எல்லாம் காட்டில் காய்ந்த நிலாவாக அல்லவா போய் விடும்? நம்முடைய வம்சம் ஸந்ததிகள் இல்லாமலல்லவா நசித்து விடும்? சகுந்தலை! நான் சொல்வதைக் கேள்" என்று மன்றாடினார்.

"அப்பா! என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். பக்ஷி ஜாலங்களைப் போல் நான் சுதந்தரமாய் வாழப் போகிறேன். சரஸ்வதி தேவியைப் போல் வீணாகானம் செய்யப் போகிறேன். கதையில் வரும் மேனகை திலோத்தமைகளைப் போல் நாட்டிய மாடப் போகிறேன்; காலை நேரங்களில் புத்தகங்களை வைத்துப் படிக்கப் போகிறேன். மாலை வேளைகளில் மான் குட்டியோடு விளையாடப் போகிறேன்" என்றாள்.

○

ஒரு நாள் சகுந்தலை தூங்கப் போகுமுன், "அப்பா, மான்குட்டி நாளுக்கு நாள் இளைத்து உரு மாறிப் போகிறதே! ஏங்கி ஏங்கி நின்று வாடுகிறதே! புல்லைக் கொடுத்தால் முகர்ந்து விட்டு அப்பால் திரும்பிக் கொள்கிறதே! இதெல்லாம் எதனால் அப்பா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"அதற்கு வாலிபப் பருவம் வந்து விட்டது, அம்மா! இன்னொரு துணை மானுடன் சந்தோஷமாகக் கூடித் திரிய வேண்டிய காலம் இது. அதனால்தான் அது அப்படி ஏங்கி இளைத்துப் போகிறது!" என்றார் ஜமீன்தார்.

"அப்படியானால் நாளைக்கே அதற்குத் துணையாக இன்னொரு மான் குட்டியைப் பிடித்து வருகிறாயா, அப்பா?" என்றாள் சகுந்தலை.

ஜமீன்தாரும் சகுந்தலையின் வார்த்தைக்கு மறுமொழி கூறாது மறுதினமே ஒரு ஆண் மான் குட்டியைப் பிடித்து வந்து தோட்டத்தில் கட்டினார். அது முதல் நந்தவனத்தில் ஆண் மானும் பெண் மானும் ஓடி விளையாட ஆரம்பித்தன.



முகத்தோடு முகம் வைத்துத் தங்கள் பரிபாஷையில் ஏதோ ரகசியம் பேசிக் கொண்டன. வாடியிருந்த பெண் குட்டியின் முகத்தில் ஒரு புது ஒளி உண்டாயிற்று. இரண்டு மான்களும் சகுந்தலை கொடுத்த புற்களைத் தின்று, தேனையும் பாலையும் குடித்துக் குதூகலத்துடன் குதித்து விளையாடின. அவற்றை யெல்லாம் பார்த்த சகுந்தலை, "அப்பா சொன்னது சரிதான்!" என்று நினைத்து ஆனந்தப்பட்டாள்.

o

வருஷங்கள் பல ஓடி மறைந்தன. சகுந்தலையின் இன்ப வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது. ஒருநாள் காலை சகுந்தலை வழக்கம்போல் படுக்கையை விட்டு எழுந்ததும் மான்களைப் பார்க்கும் பொருட்டு தோட்டத்துக்கு ஓடினாள். அங்கே அவைகளைக் காணாமல் திடுக்கிட்டாள். திடீரென்று அவை எங்கே போய்விட்டன? யாராவது திருடிக்கொண்டு போய்விட்டார்களா? சகுந்தலையின் கண்கள் கலங்கின. ஜமீன்தார் அவளைத் தேற்றினார்.

மான் குட்டிகள் பிரிந்து சென்றதும் ஜமீன்தார் சகுந்தலையின் மனோபாவத்தில் ஒரு பெரிய மாறுதலை எதிர் பார்த்தார். தம்முடைய வெகு காலைய ஆசை பூர்த்தியாகும் காலம் நெருங்கி விட்டதென்று எண்ணி ஆனந்தப்பட்டார். அவர் நினைத்தபடியே சகுந்தலையின் மனோத்துயரம் சிறிது சிறிதாக மாற ஆரம்பித்தது. ஒருநாள் அவள் "அப்பா, மான் குட்டிகளை நான் பக்ஷமாகத்தானே வளர்த்து வந்தேன்? பின் ஏன் அவைகள் இங்கிருந்து ஓடிப்போய் விட்டன? என்னிடம் இருக்க அவைகளுக்கு இஷ்டமில்லையா?" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டாள்.

"மான் குட்டியை நீ என்னதான் தேனும் பாலும் ஊட்டிப் பட்சமாக வளர்த்த போதிலும் அது காட்டில் சுதந்தரமாய் வாழ்வதற்கு ஒப்பாகுமா? எவ்வளவுதான் நீ அதைக் கட்டி அணைத்துச் சீராட்டிய போதிலும் அது தன் இனங்களுடன் துள்ளி ஓடும் ஆனந்தத்துக்கு ஈடு ஆகுமா? காட்டில் தன் உற்ற துணை மானுடன் கூடிக் குலாவுவதற்குத்தான் இணையாகுமா? குழந்தை குட்டிகளுடன் பேசிக் கொஞ்சுவதற்குத்தான் சமமாகுமா? அதை யெல்லாம் விட்டு இந்த நந்தவனத்தில் தனிமையா யிருந்து அது அடைந்த சுகம் என்ன? சகுந்தலை! கஷ்டமோ, நஷ்டமோ அவரவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் தான் பெருமையும் சந்தோஷமும் அடையலாம். நீ மானிடம் வைத்திருந்த அன்பைக் காட்டிலும் நான் உன்னிடம் பன்மடங்கு அன்பு வைத்து வளர்த்த போதிலும் அதனால் நீ பூரண இன்பத்தைக் காண முடியாது" என்று கூறி, சகுந்தலையை நோக்கினார். அப்பொழுது அவள் விழிக் கடைகளில் நீர் வழிந்து பெருகிக் கொண்டிருந்தது.

சகுந்தலையின் மனமாற்றத்தை வெகு காலமாய் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஜமீன்தார் மேலும் மேலும் போதனைகள் செய்ய ஆரம்பித்தார். அதன் பலனாய், சகுந்தலை தந்தையின் இஷ்டப்படி கல்யாணம் செய்து கொள்ளுவதற்குத் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

ஐந்தாறு வருஷங்கள் ஓடி மறைந்தன. சகுந்தலையும் அவள் கணவனும் நந்தவனத்தில் பாரிஜாத மரத்தடியிலிருந்த மேடையில் உட்கார்ந்திருந்தனர். அவர்களுடைய செல்வக் குழந்தை லட்சுமி கீழே தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தாள். தவழும் லட்சுமியின் மான் விழிகளைக் கண்ட சகுந்தலைக்குப் பழைய ஞாபகங்கள் வரவே அன்புடன் தன் குழந்தையை வாரி அணைத்து முத்த மிட்டாள். இந்தக் காட்சியைப் பார்த்த ஜமீன்தாருக்கு அப்பொழுதே தமது ஜன்மம் சாபல்யமாகி விட்டதாகத் தோன்றிற்று.



வக்கீல்:—ஒருவேளை உனக்கு வழக்கில் தோல்வி ஏற்பட்டு ஒரு வருஷம் ஜெயிலில் போட்டாலும் போடுவார்கள்.

கட்சிக்காரன்:—என்னிடம் பத்தாயிரம் ரூபாய் இருக்குங்க. எவ்வளவு வேணுமானாலும் செலவிடத் தயார். நீங்கள் தான் என்னைத் தப்புவிக்க வேண்டும்.

வக்கீல்:—அதைப் பற்றிக் கவலைப்படாதே. பணத்துடன் உன்னை நான் ஜெயிலுக்குப் போகும்படி விடமாட்டேன்.

—சுந்தர்.

தேர்ச்சி பெற்ற நர்ஸ்கள்... இல்லாமல் உலகிலுள்ள சிறந்த டாக்டர்களாலும் ஒன்றும் செய்வதற்கில்லை...... ஆம்புலன்ஸ் வண்டி வந்து நிற்கிறது. ஸ்ட்ரெட்சர் நிதானமுடன் கீழே வைக்கப்படுகிறது. சில நிமிஷங்களில் காயமடைந்த வீரன் சௌக்யமாகப் படுக்கையில் கிடத்தப்படுகிறான். இந்தியாவின் வைத்திய சேவை, டாக்டர்களை யல்லாமல் — நர்ஸ்களையும் பொறுத்திருக்கிறது. அவர்களது தேர்ச்சி, அவர்களது நிதானம், பொறுமை மற்றுமுள்ள அவர்களது சகல சாமர்த்தியங்களும்—ஒரு காயமடைந்த வீரன் நலத்திற்கு நேர்மையான ரண சிகிச்சை செய்யும் சிறந்த மருந்துகளைக் காட்டிலும் — சகாயம் செய்கின்றன. இந்த அதி முக்யமான வேலைக்கு மேன் மேலும் ஸ்த்ரீகள் தேவை.



ஏ. என். எஸ்.

(ஆக்ஸிலரி நர்ஸிங் சர்விஸ்)


இதில் சேர்ந்து இந்தியாவுக்குச் சேவை செய்யுங்கள்.

முன் அனுபவம் அவசியமில்லை. வேலையில் சேருமுன் சிறு பயிற்சி அளிக்கப் படுகிறது. ஏற்கனவே நர்ஸ் வேலையில் தேர்ந்தவர்கள் நேரடியாக சேர்ந்து விட லாம். அனுபவமுள்ளவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கப்படும். திருப்திகர மான சேவையின் முடிவில் சன்மானம் வழங்கப்படும். யோக்யதா பத்திரம் பெற்ற நர்ஸ்கள் ஐ. எம். என். எஸ். நிபந்தனைகளுக்குச் சம்மதமில்லாவிடில் விசேஷ நிபந்தனைபடி ஏ. என். எஸ்.-ல் சேரலாம். மற்ற விவரங்களுக்கு உங்கள் டிவிஷனிலுள்ள லேடி சூப்பரின்டெண்டெண்ட், ஸெயின்ட் ஜான் அம்புலன்ஸ் ப்ரிகேட், ஓவர்ஸீஸ்க்கு எழுதவும். இந்த விலாஸத்தை அறிந்து கொள்ள முடியாமல் போனால் டைரக்டர் ஜெனரல், இந்தியன் மெடிகல் சர்வீஸ், நியூ டெல்லி என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

AAA. 991

காணமற்போன வைரத்தோடு

ஸோமாஸ்



ஆடியபாதத்தின் வீட்டில் அன்று எல்லோரும் இங்கும் அங்கும் ஓடி ஆடிய வண்ணம் இருந்தனர். வீட்டில் இருந்தவர்களனைவரும் ஒரேயடியாக மும்முரமாகத் தேடுவதில் முனைந்திருந்தனர். இரண்டாயிரம் ரூபாய் பெறுமான முன்ன வைரத்தோட்டைக் காணோம் என்றால் யாராவது தேடாமலிருந்து விடுவார்களா? மூலை முடுக்குகளிலும் சந்து பொந்துகளிலும் தேடியும் தோடு கிடைக்கவில்லை. ஆடியபாதத்தின் முகத்தில் ஈயாடவில்லை. ஆமாம், இரண்டாயிரம் ரூபாய் வைரத் தோடு என்றால் சும்மாவா? எழுநூறு ரூபாய் சம்பளம் வருகிறது என்றால் அதற்காக வைரத் தோடு போனால் போகிறது என்று இருந்துவிட முடியுமா?

ஆடியபாதத்தின் வீட்டில் ஐந்தாறு வேலைக்காரர்கள் இருந்தனர். அவர்கள் எல்லோரையும் சோதனை போட்டுப் பார்த்ததில் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை.

★

அன்று வெள்ளிக்கிழமை. எண்ணெய் தேய்த்துக் கொள்வதற்காக வைரத் தோட்டைக் கழற்றிக் கூடத்து அலமாரியில் வைத்தாள் ஆடியபாதத்தின் மனைவி. ஸ்நானம் செய்ததும் தோடு போட்டுக் கொள்ள அவள் மறந்து விட்டாள். அதை ஞாபகமூட்டும் கைங்கரியத்தை ஒரு பிச்சைக்காரன் ஏற்றுக்கொண்டான்.

அவன் அபஸ்வரங்களுடன் கணீரென்று, "தோடுடைய செவியன்" என்ற பாட்டைப் பாட ஆரம்பித்ததும் ஆடியபாதத்தின் மனைவிக்குப் பளிச்சென்று வைரத் தோட்டின் ஞாபகம் வந்தது. அலமாரியில் பார்த்தால் தோட்டைக் காணோம். அவளுக்கு 'பகீர்' என்றது. உடனே வீடு முழுவதும் சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்தாள். தோடு அகப்படுகிற வழியாயில்லை. கடைசியில், வேறு வழியில்லாமல் போலீஸுக்குத் தகவல் கொடுத்துவிட்டாள்.

அன்று மாலை ஆபீஸிலிருந்து வந்த ஆடியபாதம், "வைரத்தோடு காணவில்லையென்றால் அவசரப்பட்டுக் கொண்டு போலீஸுக்கு என்னத்துக்கு 'ரிபோர்ட்' செய்தாய்?" என்று கேட்டார்.

"போலீஸில் எழுதி வைக்காமல் என்ன செய்கிறதாம்? இரண்டாயிரம் ரூபாய் பெறுமான முன்ன வைரத்தோடு காணமற் போய் விட்டதே யென்று நீங்கள் கொஞ்சம்கூட வருத்தப்படக் காணோமே!"

"வீடு முழுவதும் தேடித் தீர விசாரித்துவிட்டு அப்புறம் போலீஸுக்குத் தெரிவிக்க வேண்டும். இப்போது போலீஸ் ஸ்டேஷனிலே என் பெயர் அடிபடப் போகிறது. அநாவசியமான கேள்விகளைக் கேட்டுப் போலீஸார் தொந்தரவு செய்யப் போகிறார்கள்."

"போலீஸ் விசாரணைக்குப் பயந்தால் முடியுமா? இரண்டாயிரம் ரூபாய் பணத்தைக் கொட்டிக் கொடுத்து வைரத் தோடு வாங்கலாம்; அது கெட்டுப் போனால் போலீஸில் 'ரிப்போர்ட்' பண்ணப்படாது! ரொம்ப நன்றாயிருக்கிறது. நீங்கள் பணம் கொடுத்து வாங்கியிருந்தால் உங்களுக்கு



"என் ஸார்! இப்படிப் பேப்பரைக் கத்தரிக்கிறீர்கள்?"

"தீபாவளி நெருங்கி விட்டதோ இல்லையோ! புடவைக் கடை விளம்பரம் இவளுடைய கண்ணில் படாமலிருக்க வேண்டுமென்றுதான் கத்தரித்துப் பத்திரப் படுத்துகிறேன்."

அக்கரையிருக்கும். தோடு எங்க அப்பா வாங்கினதுதானே?" என்று கூறும்பொழுதே அவர் மனைவிக்கு விம்மிக் கொண்டு அழுகை வந்து அவளை மேலே பேசவொட்டாமல் செய்து விட்டது.

✶

ஒரு வாரம் ஆகியும் வைரத் தோட்டைப் பற்றிய துப்பு ஒன்றும் கிடைக்கவில்லை. நடந்தது இதுதான்:

ஆடியபாதத்தின் வீட்டு வேலைக்காரன் முனிசாமி அடுத்த தெரு கண்ணம்மாளிடம் உயிரையே வைத்திருந்தான். கண்ணம்மாளின் உயிர் ஏற்கெனவே முனிசாமியிடம் இருந்தது. முனிசாமிக்குத் தன் ஆசைக் கண்ணம்மாளுக்கு வைரத் தோடு போட்டு அழகு பார்க்க வேண்டுமென்று ஆசையாயிருந்தது. பதினைந்து ரூபாய் சம்பளத்திலிருக்கும் முனிசாமிக்கு வைரக் கடையில் காலை வைக்கக்கூட உரிமையேது? காசு கொடுக்காமல் வைரத்தோடு வேண்டுமென்றால் திருடாமல் என்ன செய்வது?

ஆகவே, ஆடியபாதத்தின் மனைவியின் வைரத்தோடு முனிசாமியின் மூலம் கண்ணம்மாளிடம் வந்து சேர்ந்தது.

வைரத் தோட்டைப் பார்த்த கண்ணம்மா, "அட பாவி, இந்த வைரத் தோட்டை நான் போட்டுக்கலாமா? என்ன 'டால்' அடிக்குது! உங்க எஜமானியம்மா தோடுதானே இது? நான் அங்கே அடிக்கடி போய் வருகிறேனே, இதை எப்படிப் போட்டுக்கிறது?" என்று கூறிவிட்டுப் பயத்தினால் கை கால்களெல்லாம் நடுங்க மேலே பேச முடியாமல் தவித்தாள்.

"போடி பைத்தியக்காரி, ஏன் பயப்படறே? எனக்கு மாத்திரம் ஒருதரம் வைரத் தோட்டைப் போட்டுக் காண்பிச்சுடு! அப்புறம் தோட்டைப் பணமாக்கிப் பிடலாம். நம்பளுக்குத்தான் எத்தினி நாளைக்குக் கஷ்டப்பட முடியும்? இதுலே வர பணத்தை யெடுத்துக் கொண்டு எங்கேயாவது ஓடி விடலாம்!" என்றான் முனிசாமி.

கண்ணம்மா இதற்கு ஒப்பவேயில்லை. அந்தத் தோடு எப்படியாவது தன்னை விட்டுப் போனால் போதும் என்று அவள் நினைத்தாள்.

அன்று இரவு கண்ணம்மா ஒரு முடிவுக்கு வந்தாள். தோட்டை யெடுத்துப் பத்திரமாகப் புடவைத் தலைப்பில் முடி போட்டுக் கொண்டாள். அவளையறியாமலே அவள் கால்கள் ஆடியபாதத்தின் வீட்டை நோக்கி நடந்தன. 'திக், திக்' என்று அவள் இருதயம் அடித்தது.

வழியில் ஒரு உருவம் தன்னைத் தொடர்வது போல் தோன்றியது கண்ணம்மாளுக்கு. அவ்வளவுதான்; அதற்கு மேல் அவளால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை.

"கண்ணம்மா, பயப்படாதே! வைரத் தோட்டை இப்படிக் கொடு! உன்னை ஒன்றும் செய்யவில்லை. போலீஸுக்கு இந்தக் கேஸ் போகாது. முனிசாமி குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டான்" என்றது அந்த உருவம்.

கண்ணம்மா பயத்தினால் நடுநடுங்கிக் கொண்டே, "நீ......ங்......க யா......ரு......?" என்று கேட்டாள்.

"கண்ணம்மா, என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே அந்த உருவம் தலை முக்காட்டை யெடுத்ததும் அவள் ஆச்சரியத்துடன், "எஜமான்! நீங்......க......ளா?" என்றாள்.

ஆமாம், அந்த உருவம் ஆடியபாதம்தான்!

கண்ணம்மா வேரற்ற மரம்போல் ஆடியபாதத்தின் பாதங்களில் விழுந்து, "எஜமான், என்னை மன்னிக்கணும். ஜெயிலுக்கு அனுப்பாமே என்னைக் காப்பாத்துங்கோ! இந்தாங்க தோடு!" என்று கூறித் தோட்டை ஆடியபாதத்தினிடம் கொடுத்தாள்.

இந்தச் சம்பவம் நடந்து இரண்டு மாதங்களாகி விட்டன. வேலைக்கார முனிசாமி முன்னைவிடப் பன்மடங்கு ஊக்கத்துடனும் பக்தியுடனும் ஊழியம் செய்ய ஆரம்பித்து விட்டான். எஜமான் என் என்பதற்கு முன்னால் எண்ணெயாக இருந்தான்.

முனிசாமிக்குத் திடீரென்று எஜமான விசுவாசம் ஏற்பட்டதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. அவர் முனிசாமியைப் போலீஸாருக்குக் காட்டிக் கொடுத்திருந்தால் இப்பொழுது திருடன் என்னும் பெயருடன் ஜெயிலிலல்லவா இருக்க வேண்டும்?

விஷயம் தெரிந்திருந்தால் முனிசாமி இப்படியெல்லாம் ஆடியபாதத்தினிடம் பக்தி வைத்திருக்கமாட்டான்.

இரண்டு வருஷ காலமாக ஆடிய பாதம் 'அசுவமேத யாகத்'தில் (குதிரைப் பந்தயம் தான்) ஈடுபட்டிருந்தார். ஒரு நாள் அவர் மனைவி வைரத் தோட்டை எண்ணெய் எடுக்க அவரிடம் கொடுத்தாள். வைரத் தோடு அசுவமேத யாகத்தில் 'ஸ்வாஹா' ஆகி விட்டது. ஆடியபாதம் அதற்குப் பதிலாக இமிடேஷன் வைரத்தில் ஒரு தோடு வாங்கி மனைவியிடம் கொடுத்து விட்டார். மனைவி பரிபூரணமாய் அதைப் பழைய தோடு என்றே நம்பியிருந்தாள்.

இப்படியெல்லாமிருக்கும்பொழுது வைரத்தோடு போலீஸார் கையில் அகப்பட்டிருந்தால் அதனுடைய உண்மை ஸ்வரூபம் வெளியாகியிருக்குமல்லவா? அப்பொழுது ஆடியபாதத்தின் கௌரவம் என்ன வாகும்? வெளியில் அவர் 'குட்டு' வெளியாவது இருக்கட்டும். அவர் மனைவிக்கு இது தெரிந்தால்? இதை நினைக்கும் பொழுதே ஆடியபாதத்தின் சரீரம் பயத்தினால் ஆடியது.

உண்மை இப்படி இருக்கும் பொழுது ஆடியபாதம் முனிசாமியினிடம் அவன் வைரத் தோட்டைத் திருடியதிலிருந்து பேரன்பு காட்டியதில் ஆசரியம் என்ன இருக்கிறது?



பத்து ரூபாய் அபராதம்

வம்பன்


சேஷாசலம் செட்டியாரைக் கருமி என்றும் லோபி என்றும் சொல்வார்கள். இந்த வார்த்தைகளுக் கெல்லாம் அவர் காது கொடுப்பதில்லை. வழக்கம்போல் ஒரு நாள் அவர் பீமசேன லஞ்ச் ஹோமுக்குப் போய் அரைகப் சுத்த ஜலம் சாப்பிட்டு விட்டுத் திரும்பினார். 'ஐயா! பசிக்கிறது' என்றான், ஒரு ஆசாமி அவரைப் பார்த்து. 'எனக்கும் பசிக்கவில்லை!' என்று சொல்லிவிட்டு செட்டியார் மேலே நடந்தார். ஆனால், அந்த ஆசாமி அவரை விடவில்லை. தான் பர்மாவிலிருந்து வந்த ஒரு அனாதை யென்றும், தான் சாப்பிட்டு வெகு நாளாகி விட்டதென்றும் கதறினான். கடைசியில், என்றுமில்லாத திருநாளாகச் செட்டியார் அவனை ஹோட்டலுக்கு அழைத்துப் போய் டிபன் வாங்கிக் கொடுத்தார்.

அவர்கள் வெளியே வந்ததும், அந்த ஆசாமியைப் பார்த்துச் செட்டியார், "சரி! இப்பொழுது நிஜத்தைச் சொல்! உன் முகத்தைப் பார்த்ததுமே நீ ஏழை அல்ல என்று நிச்சயமாகச் சத்தியம் செய்யலாம். கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் நீ சாப்பிடும்போது தீர்ந்து விட்டது. வெகுநாள் பட்டினி கிடந்தவன் உன்மாதிரி 'அபக் அபக்' என்று ஆகாரத்தை விழுங்குவானா? ஆமாம்; எதற்காக இப்படி அனாதை வேஷம் போட்டு என்னை ஆகாரம் வாங்கிக் கொடுக்கச் சொன்னாய்?" என்றார்.

அந்த மனிதனின் முகத்தில் புன்னகை அரும்பிற்று. தூரத்தில் நின்று அவர்கள் பக்கம் பார்த்துக் கொண்டிருந்த நாலைந்து பேர்வழிகளைச் சுட்டிக் காட்டினான். "அவர்களும் நானும் வேடிக்கையாகப் பத்து ரூபாய் பந்தயம் கட்டிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் மகா லோபி, உங்களிடமிருந்து காலணாகூட வாங்க முடியாது என்பது அவர்கள் கட்சி. அவர்கள் சொல்வது தவறு என்பது என் கட்சி. அதை ருஜுப் படுத்தத் தான் இந்த வேஷம் போட்டேன். பந்தயத்திலும் ஜயித்தேன்!" என்றான் அந்த ஆசாமி.

"அதுதான் இல்லை பந்தயத்தில் ஜயித்தது அவர்கள்தான். ஆரம்பத்திலேயே நீ வேஷக்காரன் என்று தெரிந்துதான் டிபன் வாங்கிக் கொடுத்தேன். உண்மையில் நீ அனாதையாயிருந்தால் நான் காலணாக்கூட உனக்காகச் செலவழித்திருக்க மாட்டேன்!" என்றார் செட்டியார்.

அந்த ஆசாமியும் அவரது நண்பர்களும் இதைக் கேட்டுத் திடுக்கிட்டபோது, "ஆமாம்; விளையாட்டுக்காகக்கூட என்னிடம் பிச்சை கேட்டவர்கள் பத்து ரூபாய் அபராதம் செலுத்த வேண்டியதுதான்" என்று சொல்லிக் கொண்டே போனார் செட்டியார்.



படித்துப் பார்!

பண்டித மணி

[ஆசிரியர்: வி. க. திருநாவுக்கரசு; பிரசுரம்: தமிழ்மன்ற நிலையம், புதுக்கோட்டை; விலை: ரூ. 1—4—0.]

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களின் கலைஞானம், சொல் திறமை, குண விசேஷங்கள் எல்லாவற்றையும் இனிய தமிழ் நடையில் ரஸமாகவும் சுருக்கமாகவும் குறிப்பிட்டிருக்கிறார் ஆசிரியர். இந்திரன் என்றும் சந்திரன் என்றும் புகழ்ந்து வெறும் புகழ்ச்சிச் சித்திரமாகச் செய்யாமல் உண்மை வாழ்க்கைச் சித்திரமாகவே செய்திருப்பது பாராட்டத்தக்க விஷயம். ''பாலில் எறும்பு விழுந்திருக்கிறது'' என்று சொல்வதற்குப் பதிலாக, ''திருப்பாற் கடலில் சீனிவாசன் (சீனியில் வாசம் செய்யும் எறும்பு) துயில் கொள்கிறான்'' என்று நகைச் சுவை ததும்பப் பண்டிதமணி ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருப்பதும் புத்தகத்தில் வருகிறது. இம்மாதிரி பண்டிதமணியின் நகைச் சுவையை விளக்கும் பல ரஸமான சம்பவங்களையும் புத்தகத்தில் படிக்கிறோம். எல்லாவற்றையும்விட, பண்டிதமணியைப்பற்றி எவ்வளவோ எழுதுவதற்கு இருந்தும், இந்தக் காகிதக் கிராக்கி காலத்தில் 51 பக்கத்தில் புத்தகத்தை முடித்திருப்பதற்காக ஆசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் போதாது.

சலோம் (சோக நாடகம்)

[ஆசிரியர்: ஆஸ்கார் வைல்ட்; மொழி பெயர்ப்பு: எம். எஸ். சபரிராஜன்; பிரசுரம்: ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி; விலை: ரூ. 1—0—0.]

ஏற்கெனவே பல மேல்நாட்டுக் கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்திருக்கும் ஸ்ரீ எம். எஸ். சபரிராஜன் ஆஸ்கார் வைல்டின் இந்தச் சோக நாடகத்தையும் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். மொழி பெயர்ப்பு மிகத் தெளிவாக இருக்கிறது.

கல்வி

[ஆசிரியர்: வே. சாரநாதன் எம். ஏ; பிரசுரம்: ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி; விலை: ரூ. 1—6—0.]

''கல்விக் கருவி தேச பாஷையாயிருக்க வேண்டும். சர்வ கலாசாலைப் படிப்பும் தேச பாஷைகளில் வழங்கப்பட வேண்டும். வேறு புகலில்லை. இப்பொழுது நாம் நடத்தும் கல்வி முறை முற்றிலும் தவறான பாதையில் செல்கிறது. எனவே, நம் அரசாங்கம் இன்றுள்ள கல்வி முறையை நாட்டிற்கு நலன் தரும் முறையில் திருத்தி அமைப்பது அவசியம்'' என்று ஸ்ரீ சாரநாதன் கூறுகிறார். எந்த வகையில் திருத்தியமைக்கலாம் என்பதற்குப் பல ஆலோசனைகளும் கூறுகிறார். சார்ஜண்ட் கல்வித் திட்டம், வர்தா கல்வித் திட்டம் இவற்றை பரிசீலனை செய்து தொழிற் கல்வியின் அவசியத்தையும் ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார். ''வீடுதோறும் கலையின் விளக்கம் வீடுதோறும் இரண்டொரு பள்ளி'' என்று பாரதியாரின் கனவை நனவாக்க வேண்டுமென்று சாரநாதன் முடிவில் வற்புறுத்துகிறார். தமது வாழ்நாளின் பெரும் பகுதியையும் கல்வித் துறையில் செலவிட்டிருக்கும் ஸ்ரீ சாரநாதனின் அபிப்பிராயங்களைக் கல்வி வளர்ச்சியில் சிரத்தையுள்ளவர்கள் கவனத்துடன் பரிசீலனை செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மின்னும் நக்ஷத்திரம்

[ஆசிரியர்: சிரஞ்சீவி; பிரசுரம்: கமலா பிரசுராலயம், பிராட்வே, சென்னை; விலை: ரூ. 2.]


அதிர்ஷ்ட ஹீனனான நவீனன் எழுதிய ''மின்னும் நக்ஷத்திரம்'' (இந்த நூல் அல்ல: கதையில் வரும் நூல்) ஒருவராலும் பிரசுரிக்கப்படாமலிருந்து கடைசியில் பிரசுரிக்கப்படுகிறது. மனம் முறிந்த நவீனன் மறைகிறான். அதன் பிறகு புஸ்தகத்துக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கிறது; பணம் வந்து குவிகிறது. நவீனன் யுத்தத்தில் சேர்ந்து விட்டதாக அவனிடமிருந்து அவன் நண்பன் சரணனுக்குக் கடிதம் வருகிறது. இவ்வளவு தான் கதை. புதிய மெருகின் எழுதப் பட்டிருக்கும் இந்நூலுக்கு வரவேற்பும் புதிய முறையில் இருக்குமென்பதில் ஐயமில்லை.

நார்ஜஹான்

[ஆசிரியர்: துவிஜேந்திரலால் ராய்; மொழிபெயர்ப்பு: ப. கி. விஜயராகவன்; பிரசுரம்: புத்தக நிலையம் செப்பக்குளம், திருச்சிறுப்பள்ளி; விலை: ரூ. 2—4—0.]

ஒப்பற்ற அழகியான நார்ஜஹான் ஜஹாங்கீரின் ராணியாகி மொகலாய தர்பாரை ஆட்டிவைக்கும் கதைதான் இது. அவள் மகள் லைலாவும் அவளது இளம் காதலனான ஷஹர்யாரும் தம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறார்கள்.

புஸ்தகம் மிகவும் ரஸமாக இருக்கிறது. கதைப் பின்னலோ அபாரமாயிருக்கிறது. சம்பாஷணைகளோ, கேட்கவே வேண்டாம்! —இல்லை கேட்கவே வேண்டும்! படித்துப் படித்துப் பலதடவை கேட்க வேண்டும்.



நீதிபதி:—நாலு மாதம் சிறை: பத்து ரூபாய் அபராதம்!

குற்றவாளி:— ஐயோ! சாமி! தண்டனையைக் கொஞ்சம் மாற்றக் கூடாதுங்களா?

நீதிபதி: சரி, பத்து மாதச் சிறைவாசமும் நாலு ரூபாய் அபராதமுமாக மாற்றியிருக்கிறேன், போ!

—சுந்தர்.

காலக்ஷேபம்

அவன் கஷ்டம்!

"இந்தப் பாழும் மழை எப்பத்தான் ஓயுங்களோ?"

"என்னடா, மழை உன்னை என்னடா பண்ணுகிறது?"

"தோட்டத்துக்குத் தண்ணி ஊத்த முடிய லிங்களே!" —இ. அழகிய நம்பி.

★

பிரயோஜன மில்லை!

விருந்தாளி:—அடே மணி, உன்னை அப்பா அடித்தும் நீ ஏன் அழவில்லை?

மணி:—அழுவதால் என்ன உபயோகம்? அப்பாதான் செவிடாச்சே!

—ஆர். ஆர். எஸ். மணியன்.

★

அதனால்தான்

எஜமானன்:—நீ முன்பு சமையல் செய்து கொண்டிருந்த வீட்டை விட்டு ஏன் இங்கு வந்தாய்?

சமையல்காரன்:—அங்கே எப்போதும் புருஷனும், மனைவியும் சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள்; அதனால்தான்.

எஜமானன்:—எதைப்பற்றிச் சண்டை போட்டுக் கொண்டார்கள்?

சமையல்காரன்:—என் சமையலைப் பற்றித் தான்!

—நடராஜன்.

★

"க" வில்ருந்து ......

"ஓய்! என்னங்காணும் சமையல் இன்னிக்கு உங்கள் வீட்டிலே?"

"கருணைக் கிழங்கு சாம்பார்.

கத்தரிக்காய்த் துவையல்.

காரெட் கறி, காபேஜ் கூட்டு."

"என்னங்காணும் அதிசயமா யிருக்கு! எல்லாம் 'க' 'கா'விலே ஆரம்பிச்சிருக்கு?"

"ஆமாம்! என் ஆம்படையாள் பாக சாஸ்திரம் படிச்சவள். இன்னிக்கு 'க' 'கா'விலே ஆரம்பிச்சிருக்காள்."

—சுந்தரம்.

எப்போதும் இல்லை

"என்னப்பா! எப்பவுமே இந்தக் கார் இப்படித்தான் கடபுடா கடபுடா என்று சப்தம் படுத்துமா?"

"இல்லிங்க! ஓடறபோது மட்டுந்தான்."

—ராமச்சந்திரன்.

★

நல்ல மருந்து!

நோயாளி (வைத்தியரைப் பார்த்து):—தலைவலி வருவதற்குப் பதினைந்து நிமிஷத்திற்கு முன் மருந்து சாப்பிடச் சொல்கிறீரே, தலைவலி திரும்பியும் எத்தனை மணிக்கு வருமென்று எனக்கு எப்படித் தெரியும்?

வைத்தியர்:—இது தெரியாமலா வைத்தியரிடம் வருவது? தலைவலி வருவதற்கு முன் சாப்பிடாவிட்டால் பதினைந்து நிமிஷத்திற்குப் பிறகாவது சாப்பிடுவது!

—வரதராஜன்.

★

புத்திசாலி

கணவன்:—லாட்டரியில் பிரைஸ் விழுந்தவர்கள் பேரெல்லாம் போட்டிருக்கிறார்களே: அதில் எங்கேயாவது நம் பேர் வந்திருக்கிறதா?

மனைவி:—பார்த்தாச்சு: நம் பெயர் வரவே இல்லை.

கணவன்:—பார்த்தாயா? நாம் லாட்டரியில் டிக்கெட் வாங்காமல் இருந்தது எவ்வளவு நல்லதாய்ப் போச்சு!

—மணி.

★

யோசனை!

போலீஸ்காரன்:—ஏன் மோட்டார் வண்டியை இவ்வளவு வேகமாய் ஓட்டிக்கொண்டு போகிறாய்?

மோட்டார் ஓட்டி:—ஒன்றுமில்லை; வண்டி பிரேக் சரியாக இல்லை. ஏதாவது விபத்து நேருவதற்கு முன் வீட்டுக்குப் போய்விடலாமென்றுதான்! —வி. என். நடராஜன்.

★

தூக்கத்திற்கு மருந்து



நர்ஸ் (தூங்கும் நோயாளியிடம்):—எழுந்திரும், ஐயா! தூக்கத்திற்கு மருந்து சாப்பிட நேரமாகி விட்டது! —சாரதா.

பாரதி பிறந்தார்!

ரா.கி

பாரதி தினக் கொண்டாட்டங்கள் வருஷந்தோறும் செப்டம்பர் 11உ தமிழ் நாட்டில் நடக்கின்றன. ஒரு வருஷம் நடந்த ஒரு கொண்டாட்டத்தில் ஒரு பிரசங்கி, பாரதியாரின் பெருமையையும் அவருடைய கவியின் மகிமையையும் பற்றிப் பேசிவிட்டுப் பின் வருமாறு பேச்சை முடித்தார்:—

"அப்பேர்ப்பட்ட பாரதியார் இன்றைய தினம் இந்த மண்ணுலகை விட்டுப் பொன்னுலகை அடைந்தார்! அவரை நாம் எல்லோரும் பின்பற்றுவோமாக!"

ஆனால், அந்தக் கூட்டத்தில் இருந்தவர் ஒருவராவது அன்றைய தினம் பாரதியாரைப் பின்பற்றவில்லை! பிறருக்குப் போதனை செய்த பிரசங்கிகூட அவரைப் பின்பற்றிப் பொன்னுலகம் சேரவில்லை. எல்லாரும் கல்லுப் பிள்ளையாரைப் போல் உட்கார்ந்திருந்து விட்டுத் தத்தம் வீட்டுக்குச் சென்றார்கள்!

இப்படிப்பட்ட பேச்சு விபரீதங்களுக்குக் காரணமாயிருப்பது என்னவென்றால், பாரதியாரின் ஞாபகத்தைக் கொண்டாடுவதற்கு நாம் அவருடைய மரண தினத்தை ஏற்படுத்திக் கொண்டதேயாகும். அவர் இறந்து போனதை ஏன் அவ்வளவு உற்சாகமாகக் கொண்டாட வேண்டும் என்றும், அதற்குப் பதிலாகப் பிறந்த தினத்தைக் கொண்டாடுவது பொருத்தமில்லையா வென்றும் ஒரு பிரச்னை வருஷா வருஷம் கிளம்புகிறது.

இந்தக் கேள்விக்கு, காரைக்குடி தேசபக்தரும் பாரதியாரைப் பார்த்துப் பழகும் பாக்யம் பெற்றவருமான ஸ்ரீ சா. கணேசன் இந்த வருஷம் சென்னையில் நடந்த கொண்டாட்டத்தில் பதில் சொன்னார்:—



"பிறக்கும்போது எல்லா மனிதர்களும் ஒரே மாதிரிதான் பிறக்கிறார்கள், வித்தியாசமே கிடையாது. இறந்து, ஒழிந்து, செத்து, மாய்ந்து, மடிந்து, மாண்டு* போன பிறகுதான் ஒருவருடைய பெருமையும் மகிமையும் நன்கு புலனாகிறது. ஆகையால், பாரதியார் மாண்ட தினத்தை — மாண்ட அதாவது மகிமை வாய்ந்த தினத்தை — கொண்டாடுவது தான் சாலப் பொருத்தமானது!"

ஸ்ரீ சா. கணேசனுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, எனக்கு ஒரு விஷயம் புலனாயிற்று. பாரதியார் அவ்வளவு அவசரமாக, — நம்மைப் போன்ற துரதிர்ஷ்டசாலிகள் அவரைத் தரிசிக்கும் பாக்யம் பெறுவதற்கு முன்னாலேயே, — ஏன் காலமானார் என்று தெரிய வந்தது.

இறந்து, ஒழிந்து, செத்து, மாண்டு போன பிறகுதான் தம்முடைய மகிமையும் பெருமையும் வெளியாகும் என்பது பாரதியாருக்கும் தெரிந்திருக்க வேண்டும். மகிமையும் பெருமையும் அடைவதற்காக யார்தான் கொஞ்சம் அவசரப்பட மாட்டார்கள்!

• • •

பெரியவர்கள் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதா, இறந்த தினத்தைக் கொண்டாடுவதா என்பது உண்மையில் ஒரு சிக்கலான பிரச்னைதான். நமது பூர்விக சம்பிரதாயங்களைப் பார்த்தாலும் இந்தச் சிக்கலைத் தீர்க்க உதவி ஏற்படவில்லை. இராமன், கிருஷ்ணன் முதலியவர்களின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறோம். ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியவர்கள் திருநாடு சேர்ந்த தினத்தைக் கொண்டாடுகிறோம். எது சரியான முறை?

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், நமது பூர்விக சம்பிரதாயத்திலும் ஒரு முறை இருப்பதாகவே தோன்றுகிறது.

தேவர்கள் வந்து பூலோகத்தில் அவதரிக்கும்போது அவர்களுடைய ஜன்ம தினத்தைக் கொண்டாடுகிறோம்.

சாதாரண மனிதப் பிறவி எடுத்தவர்கள் அரும் பெரும்

* இவ்வளவும் ஸ்ரீ சா. கணேசனுடைய வாய் மொழிகளே.

காரியங்களைச் செய்து விட்டு மரணமடையும்போது, உண்மையில் அவர்கள் அமரர்களாகவும் சிரஞ்சீவிகளாகவும் ஆகிறார்கள்! எனவே, அவர்கள் மனிதப் பிறவியை நீத்து அமர பதவி அடைந்த தினத்தைக் கொண்டாடுவதும் பொருத்தந்தான்!

ஆனாலும் ஒன்று நிச்சயமாகக் கூறலாம். பிறந்த தினத்தைக் கொண்டாடுவது முறையா, மரண தினத்தைக் கொண்டாடுவது முறையா என்னும் பிரச்னை எப்படித் தீர்ந்த போதிலும், பெரியவர்கள் **பிறந்த தினமும்** முக்கியமானதுதான் என்பதில் சந்தேகமில்லை.

ஏனெனில், ஒருவர் மரணமடைவதற்கு ஆதாரமான காரியம் அவருடைய பிறப்பேயல்லவா! பிறக்காவிட்டால் இறக்கவும் முடியாதல்லவா?

எனவே, பாரதியார் பிறந்த நாளும் முக்கியமானதுதான். அதைப் போலவே அவர் **பிறந்த இடமும்** முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை.

* * *

ஆங்கில மகா கவியான ஷேக்ஸ்பியர் பிறந்த தினத்தை அவர் பிறந்த ஊரிலேயே கொண்டாடுவது பற்றி ஆங்கிலப் பத்திரிகைகளில் படிக்கும்போதெல்லாம் எனக்கு எட்டயபுரம் ஞாபகம் வருவதுண்டு.

ஷேக்ஸ்பியர் பிறந்த ஊரில் அவருடைய தாயார் வசித்த குடிசை ஒன்று முக்கியமான காட்சிப் பொருளாயிருக்கிறதாம். அந்தக் குடிசையை ஏறக்குறைய வருஷா வருஷம் புதுப்பித்துக் கட்ட வேண்டியிருக்கிறதாம்! ஏனென்றால், ஷேக்ஸ்பியர் பிறந்த தினத்தில் அவருடைய ஊருக்கு வரும் லட்சக் கணக்கான ஜனங்கள், ஷேக்ஸ்பியரின் ஞாபகார்த்தமாக மேற்படி குடிசையிலிருந்து ஒவ்வொரு சிறு பகுதியைப் பிய்த்து எடுத்துக் கொண்டு போய் விடுவார்களாம்! அவர்கள் வந்து போன பிறகு அநேகமாக அக் குடிசையில் குட்டிச் சுவர்தான் பாக்கி இருக்குமாம்!

மேற்படி குடிசை ஷேக்ஸ்பியரின் தாயார் வசித்த குடிசை என்பது வெறும் கட்டுக் கதையே என்று அனைவரும் அறிந்திருந்த போதிலும், அதைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லையாம்! ஷேக்ஸ்பியரின் பெயரால் நடக்கும் மோசடியைக்கூட, ஷேக்ஸ்பியர் கொண்டாட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகவே கருதி, குதூகலத்துடன் அக் குடிசைக் கூரையில் ஒரு பகுதியைப் பிய்த்துக் கொண்டுபோய் விடுவார்களாம்! ஆங்கிலேயர் தங்களுடைய கவிஞரை அப்படிப் பாராட்டுகிறார்கள்!

இதையெல்லாம் படிக்கும்போது எனக்கு எட்டயபுரம் ஞாபகம் வரும். அதோடு, எட்டயபுரத்தை இன்னும் ஒரு தடவை கூட நாம் போய் எட்டிப் பார்த்துவரவில்லையே என்று அவமானமாயுமிருக்கும். "பாரதியார், பிறந்த எட்டயபுரம் நமக்கு எட்டாத பழமாகவே இருந்து விடுமோ!" என்றும் சில சமயம் ஆதங்கமடைவேன்.

நல்ல வேளையாக, இந்த வருஷத்தில் பாரதியார் திருநாளுக்குச் சில தினங்களுக்கு முன்னால் எட்டயபுரம் போவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்தவர்கள் எட்டயபுரத்திலுள்ள ஆரம்பப் பாடசாலையில் உபாத்தியாயர் வேலை பார்க்கும் சில இளைய நண்பர்கள்.

* * *

தமிழ் நாடெங்குமே தேசிய உணர்ச்சியையும் தமிழ் அன்பையும் கலை ஆர்வத்தையும் வளர்த்து வரும் இருக் கூட்டம் ஒன்று இருக்கிறது. பட்டணங்களிலிருந்து வெகு தூரமுள்ள கிராமாந்தரங்களிலும், ரயிலைக் கண்ணால் காணாத பிரதேசங்களிலும், மூன்று நாளைக்கு ஒரு தடவை தபால் சேரும் பட்டிக்காடுகளிலும் கூட மேற்படி இருக் கூட்டத்தார் அறிவு விளக்கை ஏற்றிவைக்கும் அருந் தொண்டை ஆற்றி வருகிறார்கள். இவர்களுக்கு இங்கிலீஷ் பாஷை தெரியாது; அல்லது அந்த பாஷையிலே சொற்பமான பரிச்சயம்—தபால் மேல் விலாஸம் எழுதும் அளவுக்கு—இருக்கும். ஆனால் இங்கிலீஷ் படித்த கூட்டத்தாரைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அறிவு விசாலம் உள்ளவர்கள். அறிவை விசாலித்துக் கொள்வதில் ஆர்வமும் கொண்டவர்கள். தமிழ்ப் புத்தகங்களை வெளியிடுவோரும், தமிழ்ப் பத்திரிகைகள் நடத்துவோரும் இந்தக் கூட்டத்தை நம்பியே தங்கள் காரியங்களை நடத்தி வருகிறார்கள். சமீப காலத்தில் தமிழ் நாட்டில் புத்தகப் பிரசுரம் ஓங்கி வளர்ந்திருப்பதற்கும் தமிழ்ப் பத்திரிகைகள் பல வெற்றிகரமாக நடந்துவருவதற்கும் காரண புருஷர்களாயிருப்பவர்கள் இந்த இளைஞர் கூட்டத்தார்தான்.

எட்டயபுரத்தில் உள்ள மேற்கூறிய இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் "பாரதி இலக்கிய மன்றம்" என்பதாக நமது தேசிய கவியின் பெயரால் ஒரு சங்கம் ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். இச்சங்கத்தின் ஆதரவில் தமிழிசை மகாநாடு ஒன்று நடத்த ஏற்பாடு செய்து அதற்கு என்னை வரும்படி அழைத்தார்கள். பாரதியார் பிறந்த ஊரைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவல் காரணமாக நானும் தக்ஷணமே ஒப்புக் கொண்டேன். ஆனால் அவ்வளவு தக்ஷணமாக அவர்கள் குறிப்பிட்ட தேதியில் போக முடியவில்லை. நானுக இரண்டு மூன்று தடவையும், மகாநாட்டுத் தலைவர் டி. கே. சி. இரண்டு, மூன்று தடவையும், தள்ளிப் போட்ட பிறகு கடைசியில், நானாகவே "செப்டம்பர் 9ஆ கட்டாயம் வருகிறேன்; வந்தே தீருவேன்; அப்படித்தான் வருவேன்; வராமல் இருக்க முடியாது" என்று மேற்படி மன்றத்தின் தலைவர் ஸ்ரீ மு. கந்தசாமி செட்டியாருக்குத் தந்திமேல் தந்தி கொடுத்து விட்டுப் போய்ச் சேர்ந்தேன்.

* * *

புறப்படுவதற்கு முதல் நாள் எனக்குக் கிடைத்த மகாநாட்டு விளம்பரத்தில் "ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர் சொற்பொழிவு ஆற்றுவார்" என்று போட்டிருந்ததைப் பார்த்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

எனவே, விருதுநகரில் பாகவதரைச் சந்தித்த வுடனே, "பாகவதர்வாள்! தெரிந்ததா?" என்றேன்.

"எது?" என்று கேட்டார் பாகவதர்.

"நீங்கள் பிரசங்கம் செய்யப்போகிற செய்தி" என்றேன்.

"ஆமாம்" என்றார் பாகவதர்.

"அப்படியானால், சரி; நீங்கள் பிரசங்கம் செய்யுங்கள்; நான் பாடுகிறேன்" என்றேன்.

"வேண்டாம், வேண்டாம்!" என்று அலறினார் பாகவதர்.

"பாடத்தான் பாடுவேன். நீங்கள் யார் வேண்டாம் என்று சொல்வதற்கு?" என்றேன்.

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. நீங்கள் பாட ஆரம்பித்து விட்டால் எங்கள் பிழைப்பெல்லாம் என்ன ஆவது?" என்றார் பாகவதர்.

"அந்த பயம் மனசிலே இருக்கிறதா? நல்லது; அப்படியானால் இன்றைக்கு நீங்கள் பாட வேண்டும்" என்றேன்.

"சரி" என்றார் பாகவதர்.

"பேச்சு பத்து நிமிஷம்; பாட்டு ஒரு மணி" என்றேன்.

"பேச்சு ஐந்தே நிமிஷம்; பாட்டு ஒன்றரை மணி" என்றார் பாகவதர்.

* * *

எட்டயபுரத்தில் தமிழிசை மகாநாடு மிகச் சிறப்பாக பாண்டு வாத்திய முழக்கங்களுடன் ஆரம்பமாயிற்று. மகாநாட்டை எட்டயபுரம் மகாராஜா அவர்கள் கதையில் வரும் மந்திரவாதியைப்போல் திறந்து வைத்தார். அதாவது மகாராஜா, "திற!" என்றதும், மகாநாடு திறந்து கொண்டது.

பிறகு, ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் ஏற்கெனவே உட்கார்ந்திருந்த அக்கிராசன பீடத்தில் இன்னும் கொஞ்சம் பலமாக அமர்ந்தார்!

பின்னர், உபசாரப்பத்திரம் படித்துக் கொடுத்தல். எனக்குக் கொடுக்க இருந்த பத்திரத்தைப் படிக்க ஆரம்பித்த போது, "நானே படித்துக் கொள்கிறேன்; கொடுத்துவிடுங்கள்!" என்று கையை நீட்டினேன். காரியதரிசி முடியாதென்று மறுத்துவிட்டு, தாமே ஒரு தடவை பார்த்த பிறகுதான் கொடுத்தார். நான் அதை வாங்கிப் பார்த்த பிறகுதான் இரகசியம் வெளியாயிற்று. உபசாரத்தில் அச்சுப் பிழைகள் தாராளமாயிருந்தன. "உங்கள் பத்திரத்திலே யென்று அச்சுப் பிழைகள் அதிகமாக வந்திருக்கின்றன, பாருங்கள்!" என்றார் காரியதரிசி. மற்றவர்கள் படிக்கவே மாட்டார்கள், படித்தாலும் அவர்களுக்குப் பிழை கண்ணில் படாது என்று அவருக்கு அவ்வளவு தைரியம்!

* * *

அன்று காலை மகா நாட்டிலே ஸ்ரீ தியாகராஜ பாகவதரின் பிரசங்கம் தான் முக்கியமான அம்சம்.

பாகவதர் என்னிடம் சொன்ன வார்த்தையை வெகு அழகாக நிறைவேற்றினார். தமிழிசை இயக்கத்தின் பெருமையைத் தம்முடைய சுய அனுபவங்களுடன் பத்தே நிமிஷத்திற்குள் இரத்தினச் சுருக்கமாக எடுத்துச் சொன்னார். பிறகு, உதாரண முகமாக, சுமார் ஒன்றரை மணி நேரம் ஒலி பெருக்கியின் முன்னால் நின்ற நிலையிலேயே பாடினார். ஸ்நாதமான அவருடைய மதுர சாரீரம் கணீரென்று ஒலித்துச் சபையோரின் செவிகளை நிறைத்தன. விருத்தம் ஒன்றை ஆறு

ராகங்களில் அமர்க்களமாகப் பாடினார். சபையோர் மெய்ம் மறந்து கேட்டு ஆனந்த பரவச மடைந்தார்கள்.

பாகவதர் பாட்டுக்குக் கிடைத்த கரகோஷ ஆரவாரத்துடன் காலை மகா நாடு இனிது முடிந்தது.

* * *

மாலையில் மறுபடியும் எட்டயா புரம் தமிழிசை மகா நாடு கூடியது. திருநெல்வேலி காலேஜ் பொருளாதார புரொபஸரும், பிரசித்த ஸாஹித்ய கர்த்தா ஸ்ரீ நீலகண்ட சிவம் அவர்களின் வம்சத்தில் வந்தவருமான ஸ்ரீமதி சாரதாம்பாள் எம். ஏ. வீணையுடன் தமிழிசை பாடினார். பிறகு, அக்கிராசனர் டி. கே. சி. அவர்களின் பிரசங்கமும் மற்றப் பிரசங்கங்கள் அதிகப் பிரசங்கங்களும் முறைப்படி நடந்து முடிந்தன. எல்லாம் வெகு விமரிசையாக நடந்தது.

இராத்திரி ஸ்ரீ அமிருதஸ்வாமி அவர்களின் இல்லத்தில் நடந்த விருந்து உன்படத்தான்.

அமிருதஸ்வாமி என்பவர் எட்டயா புரம் ஜமீன்தாரின் மைத்துனர்; அதாவது சகோதரியின் கணவர். இவர் இருக்கிறார் என்கிற தைரியத்திலே எட்டயா புரத்து இளைஞர்கள் யாரை வேண்டுமானாலும் அவர்களுடைய பாரதி இலக்கிய மன்றக் கூட்டங்களுக்கு அழைத்து விடுவார்களாம்! அழைக்க வேண்டிய பொறுப்பு அவர்களுடையது; வந்தவர்களுக்கு விருந்தளித்து உபசரிக்க வேண்டிய பொறுப்பு ஸ்ரீ அமிருதஸ்வாமி அவர்களுடையது!

ஸ்ரீ அமிருதஸ்வாமி, பாரதியாரின் ஜீவிய காலத்தில் அவரோடு பழகி, அவருடைய பாட்டைக் கேட்டவராம். பாரதியார் பாடுவது போலவே சில பாடல்களின் முதல் அடிகளைப் பாடிக் காட்டினார். "பாரதியார் இப்படித்தான் பாடுவார்!" என்று டி. கே. சி. சாட்சி கூறினார்.

அன்றைய இரவு எங்களுக்கு வெகு நீண்ட இரவாகத் தோன்றியது. பொழுது எப்போது புலரும் என்று இருந்தது. ஏனென்றால், மகாநாடு முடிந்தது என்றாலும் உண்மையிலே எதற்காக நான் வந்தேனோ, அந்தக் காரியம் ஆகவில்லை. பாரதியார் பிறந்த வீட்டைப் பார்த்தாகவில்லை. மறு நாள் காலையிலேதான் பார்ப்பதாக இருந்தோம்.

மெதுவாகப் பொழுதும் விடிந்தது. பாரதியாரின் மூத்த புதல்வி ஸ்ரீமதி தங்கம்மாள் முதல் நாள் வைபவத்துக்காக வந்திருந்தபடியால் அவரே எங்களுக்குப் பாரதியார் வீட்டைக் காட்டுவதாக முன்வந்தார். எல்லாருமாகக் கிளம்பினோம்.

* * *

எட்டயாபுரம் வீதிகளிலே நடந்து போகையிலேயே எனக்கு என்னமோ செய்தது. "இந்த வீதிகளின் வழியாகப் பாரதியார் எத்தனையோ நாள் நடந்து போயிருப்பாரல்லவா? இந்தத் தெருப் புழுதி யெல்லாம் அவர் மேலும் பட்டிருக்கு மல்லவா?" என்று நினைத்த போது, பாரதியாரோடு புதிய உறவு ஏற்பட்டு விட்டதாக எனக்குத் தோன்றியது. பின்னோடு வந்தவர்களில் ஒருவரின் கால் தடுக்கி நான் கீழே விழப்பார்த்து அவர் என்னைப் பிடித்துக்கொண்டபோது, "அடாடா! விழாமற் போனோமே? இந்த எட்டயா புரத்துப் புழுதியில் இன்னும் கொஞ்சம் செல்லைக்குக் கொண்டு போயிருக்கலாமே?" என்று நினைத்தேன்.

பாரதியாரின் வாழ்க்கையில் ஒரு சிறு சம்பவமும் அப்போது நினைவுக்கு வந்தது. அதை ஏற்கெனவே எப்போதாவது எழுதியிருக்கிறேனா என்பது நினைவில்லை. எழுதியிருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு தடவை ஞாபகப் படுத்திக் கொள்ளக் கூடிய சம்பவந்தான்.

பாரதியார் சிலகாலம் 'கடையம்' என்னும் கிராமத்தில் தங்கியிருந்தார். அப்போது ஒரு தடவை எங்கேயோ போவதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று ரயில் ஏறினார். பெரும்பாலும் மெய்மறந்து பரவச நிலையில் உள்ளவராதலால், ரயில் ஏறும் போது காலைப் படியில் வைப்பதற்குப் பதிலாகப் பக்கத்தில் வைத்துவிட்டார். தடால் என்று பிளாட்பாரத்தில் விழுந்தார்! அருகில் இருந்தவர்கள் எல்லாரும் "ஐயோ! பாரதியார் விழுந்து விட்டாரே!" என்று அலறிப் புடைத்துக் கொண்டு அவரைத் தூக்க வந்தார்கள். "தூக்காதே!" "கிட்ட வராதே!" என்று ஆவேசம் வந்தவரைப் போல் கூவினார் பாரதியார். "இது என்ன வம்பு!" என்று மற்றவர்கள் திகைத்து நிற்க, பாரதியார், மீண்டும் "ஆஹா! இந்தப் புண்ணிய பூமியிலே படுப்பதற்கு, இந்தப் பாரத நாட்டின் புழுதியிலே புரள்வதற்குக் கொடுத்து வைக்க வேண்டாமா? எத்தனை பெரியோர்கள், எத்தனை மகான்கள், எவ்வளவு கற்புக் கரசிகள், எவ்வளவு

மகாகவிகள், கலைஞர்கள், அவதார புருஷர்கள் வாழ்ந்த தேசம் இது? இப்பேர்ப்பட்ட தாய் நாட்டின் மண்ணில் இன்னும் கொஞ்சம் புரண்டு விட்டு வருகிறேன். எல்லாரும் எட்ட நில்லுங்கள்!'' என்று சொல்லிவிட்டு, அனைவரும் பார்த்திருக்க, அந்த ரயில் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் உண்மையிலேயே புரண்டாராம். ரயில் டிரைவரும் கார்டும் கூடப் பிரமித்துப் போய் நின்று, பாரதியார் எழுந்து வந்து ரயில் ஏறிய பிறகுதான் ரயிலை விட்டார்களாம்! *

எட்டயாபுரத்துப் புழுதியில் விழுந்து புரண்டால் ஒருவேளை அடுத்த ஜன்மத்திலாவது பாரதியாரைப் போல் ஒரு பாடல் பாடும் சக்தியாவது என்ற ஆசை எனக்கு அப்போது ஏற்பட்டது. அப்படிச் செய்தால் ஒருவேளை வேஷ்டி அழுக்காய்ப் போய் விடுமோ என்ற பயம் வந்து மேற்படி ஆசையைத் தடுத்துக் கொண்டது.

சந்து பொந்துகளின் வழியாகச் சென்று கடைசியில் பாரதியார் பிறந்த வீட்டை அடைந்தோம். வீட்டு வாசலில் ஒன்றுக்குமேல் ஒன்று உயரமாக இரண்டு விசாலமான திண்ணைகள் இருக்கின்றன. மேல் திண்ணையின் ஓரத்தில் சுவரில் ஒரு குறுகலான வாசற்படி காண்கிறது. அதற்குள்ளே இருக்கும் அறையிலேதான் பாரதியார் பிறந்தார் என்று சொன்னார்கள். ஆகா! பிறந்த குழந்தை 'குவா குவா' என்று அழுத போது, அந்தக் 'குவா' சத்தத்தில், தேச வெறியும் தமிழ்ப் பண்பும் பொங்கித் ததும்பும் அழகிய தமிழ்ப் பாடல்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றன வென்று யாருக்குத் தெரிந்திருக்கப் போகிறது?

அந்த வாசற்படிக்கு வெளியே திண்ணையில் பாரதியார் தூணில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருப்பது வழக்கம் என்றும் சொன்னார்கள். இப்போது இதே இடத்தி லிருந்துதான் பாரதி திருநாளன்று அவருடைய திருவுருவப் படஊர்வலத்தை ஆரம்பித்து நடத்துகிறார்களாம் — பாரதி இலக்கிய மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள்தான்.

பாரதியார் பிறந்த வீட்டில் சற்று நேரம் நின்று, உட்கார்ந்து, அங்கு மிங்கும் நகர்ந்து, பலவிதத்திலும் ஏதாவது பாட்டுப் பாட வருகிறதா என்று பார்த்து விட்டு, ஒன்றும் பயனில்லாமற் போகவே, கோவில்பட்டிக்கு ரயில் வரும் நேரத்தை நினைத்துக் கொண்டு புறப்பட்டோம். ஸ்ரீமதி தங்கம்மாள் வழியிலே பாரதியாரின் தாய் மாமன் வீட்டுக்கு எங்களை அழைத்துச் சென்றார். பாரதியாருடைய தாய் மாமனின் கடைசிப் பெண் செள. மீனாட்சி பாரதியார் கீதங்கள் சிலவற்றை மிகவும் இனிமையான குரலில் பாடிக் காட்டினார். அவர் பாடிய மெட்டுக்கள், பாரதியாரின் அசல் மெட்டுக்கள் என்று சொன்னார்கள். பாரதியாருடைய மாமா அந்தக் கீதங்களை அவரைப் போலவே பாடுவார் என்றும், அவரிடமிருந்துதான் அவருடைய குமாரி கற்றுக்கொண்டதாகவும் அறிந்தோம். நாங்கள் போன சமயம் மாமா ஊரில் இல்லை.

மீனாட்சியின் கணவருக்கு எட்டயாபுரம் அரண்மனையில் உத்தியோகம்

---

* இந்தச் சம்பவம் உண்மையாக நடந்ததா என்று என்னைச் சத்தியம் செய்யச் சொன்னால் செய்ய முடியாது. பாரதியாரின் பத்தினியும் சொந்த மகளும் எழுதிய வாழ்க்கைச் சம்பவங்களையே அவருடைய சீடர்கள் மறுத்து "அப்படி ஒன்றும் இல்லை" என்கிறார்கள். எனவே, மேற்படி சம்பவம் உண்மையில் நடந்தது என்று நான் சத்தியம் செய்வதற்கில்லை. ஆனாலும் பாரதியார் பாடல்களில் அடங்கியுள்ள தேசபக்தி வெறியைப் பார்க்கும்போது, சம்பவம் நடந்திருக்கக்கூடியதுதான் என்று தோன்றுகிறது.

என்று அறிந்தோம். இதைப் பற்றிய பிரஸ்தாபம் வந்தபோது, பாரதியாரும் இரண்டு வருஷ காலம் எட்டயாபுரம் அரண்மனையில் உத்தியோகம் பார்த்ததாகத் தெரிய வந்தது. அப்படியானால், கட்டாயம் அந்த அரண்மனையையும் பார்த்து விட வேண்டுமென்று தீர்மானித்தேன். தலைமுறை தலைமுறையாகத் தமிழையும் சங்கீதக் கலையையும் ஆதரித்து வந்தவர்கள் எட்டயாபுரம் ஜமீன் வம்சத்தார் என்று அறிந்திருந்தபடியால், அரண்மனைக்குப் போவதில் ஊக்கம் ஏற்பட்டது.

இப்போதுள்ள எட்டயாபுரம் ஜமீன்தார் வயதிலேயே இளைஞர். ஆனால் அறிவிலே முதிர்ந்தவர். காலேஜில் படிக்காவிட்டாலும் ஆங்கிலக் கல்வி நன்கு பயின்றவர். அதோடு பயனுள்ள இன்னும் பலவிதக் கல்விகளும் பெற்றிருக்கிறார்.

அரண்மனைத் தோட்டத்தில் ஒரு பகுதியை மேலே நெருக்கமான இரும்பு வலைபோட்டு, ஒரு விசாலமான பட்சிக் கூண்டாகச் செய்திருக்கிறது. அதற்குள்ளே விதவிதமான பட்சிகள் நூற்றுக் கணக்கில் வசிக்கின்றன. பற்பல தேசங்களிலிருந்தும் கொண்டுவந்த பட்சிகள் இருக்கின்றன. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு ஜாதிக் கிளிகளைத் தனியாக ஒரு பக்கத்தில் விட்டிருக்கிறார்கள். சுமார் நூறு கிளிகள் இருக்கும். உருவத்தில் எல்லாம் ஒரு விதந்தான்! ஆனால் வர்ணத்தில் நூறும் நூறுவிதம்! சிவப்பிலே பலவகை, ஊதாவில் பலவகை, பச்சையில் பலவகை, நீலத்தில் பலவகை, — இப்படிக் கண்ணைப் பறிக்கும் நிறங்கள் உள்ள அழகிய பட்சிகள்.

இன்னும் அரண்மனையின் ஒரு தாழ்வாரத்தில், சென்னைக் கடற்கரை மீன் காட்சிச் சாலையில் உள்ளது போலவே, விதவிதமான அழகழகான வர்ண மீன்கள் கண்ணாடிப் புட்டிகளுக்குள் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. சுவர்களில் உலகப் படங்களும், தேசங்களின் படங்களும் தொங்குகின்றன. புத்தகசாலை அறையில் பொது அறிவை வளர்ப்பதற்குரிய எத்தனையோ அபூர்வமான புத்தகங்கள் இருக்கின்றன.

அரண்மனையில் இன்னும் எவ்வளவோ பார்க்கத்தக்க கலைப் பொக்கிஷங்கள் இருக்கின்றனவென்று அறிந்தோமானாலும், ரயிலை நினைத்துக் கொண்டு ஜமீன்தாரிடம் விடை கேட்டோம். அப்போது அவர் போட்ட போடு என்னைத் திகைக்கச் செய்து விட்டது. "டி. கே. சி. யிடம் கம்பன் பாடல் கேட்க வேண்டுமென்று எவ்வளவோ நாளாக எனக்கு ஆசை!" என்றார்.

அவ்வளவு தான்; எழுந்தவர்கள், திரும்ப உட்கார்ந்து விட்டோம்.

குற்றாலத்து மலையில் ஒரு நாள் நான், டி. கே. சி. யிடம், "இதோ இந்தச் சின்ன இடத்துக்குள் நூற்றைம்பது வகை மரங்கள் இருக்கின்றன. பார்த்தீர்களா? ஒரு மரத்தைப்போல் இன்னொன்று இல்லை; ஒரு இலையைப் போல் இன்னொன்று இல்லை; ஒரு இலை நிறம்போல் இன்னொரு இலை நிறம் இல்லை. நூற்றைம்பது மரத்தின் இலையும் நூற்றைம்பது விதமான பச்சை நிறம்! இது என்ன விந்தை!" என்றேன்.

அப்போது டி. கே. சி. "இதே விஷயத்தைக் கம்பனும் அநுபவித்து ஆச்சரியப்பட்டிருக்கிறான்!" என்று கூறி,

"மறைகளை மறந்து போய்
வனத்துள் வைகுவான்!"

என்னும் அடியை எடுத்து விளக்கினார்.

மேற்படி வரிக்குச் சாதாரண சம்பிரதாய அர்த்தம் என்னவென்றால்,

"வேதங்களால் அறியப்படாதவனான பரம்பொருள் இராமவதாரம் எடுத்து நாட்டைத் துறந்து காட்டுக்குப் போனான்!"

என்பதுதான்.

டி. கே. சி. அதற்குக் கூறிய அர்த்தம் பின்வருமாறு:—

"ரிஷிகளும் முனிவர்களும் வேத நூல்களில் கடவுளுடைய தத்துவத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த வேத நூல்களைப் படித்து அர்த்தம் செய்து கொள்வது அவ்வளவு எளிதல்ல. படித்து அர்த்தம் தெரிந்தவுடனே, "ஆஹா! எனக்கல்லவா இதன் பொருள் தெரிந்து விட்டது?" என்று ஆணவம் உண்டாகிறது. ஆணவம் தோன்றிய இடத்திலிருந்து பகவான் உடனே மறைந்து விடுகிறார்!

ஆனால், காட்டுக்குள்ளே போய் விட்டால், 'நான் செய்தேன்' என்ற ஆணவ உணர்ச்சிக்கே இடமில்லாமல் போகிறது. வனத்துக்குள்ளே இருக்கும் மலைகள், விருட்சங்கள், செடி கொடிகள், அருவி எல்லாம் 'நான் செய்தேன்' என்ற உணர்ச்சிக்குச் சிறிதும் இட

மின்றிக் கடவுளின் செயலையே நினை ஊட்டுகின்றன. எனவே, காட்டுக் குன்றேதான் மனிதனுடைய ஆணவம் அடியோடு மறைந்து இறைவனுடைய பெருமையை நன்கு உணர முடிகிறது!"

குற்றாலத்தில் கேட்ட மேற்படி பாடலைத்தான் எட்டயாபுரம் அரண்மனையில் சொல்லும்படி டி. கே. சி. யிடம் கேட்டுக் கொண்டேன். ஜமீன்தாருக்கு விருட்சங்கள், செடிகள், பட்சிகளிடம் உள்ள பிரியத்தைக் கண்டு மேற்படி பாடலை அவர் நன்றாய் அநுபவிப்பார் என்று நினைத்தேன். அது உண்மையாயிற்று. அதை அவர் அநுபவித்த விதத்திலிருந்து அவருடைய ரஸிகத்தன்மை நன்கு புலப்பட்டது.

ஜமீன்தாரிடமும், எட்டயா புரத்திடமும் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டோம். ஸ்ரீ அமிருதஸ்வாமியும் பாரதி இலக்கியமன்றத்து இளைஞர்களும் கோவில்பட்டி வரையில் வந்து எங்களை ரயில் ஏற்றிவிட்டார்கள்.

பாரதியார் பிறந்த எட்டயாபுரத்தில் அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு சிறு புத்தக நிலையமாவது ஏற்படுத்த வேண்டும் என்பது எட்டயாபுரத்து இளைஞர்களின் விருப்பம். அதற்கு வேண்டிய ஒத்தாசைகளை நான் செய்ய வேண்டுமென்றும், தமிழ் மக்களை அதில் ஊக்கங் கொள்ளச் செய்ய வேண்டுமென்றும் அவர்கள் ரயில் கிளம்பும் வரையில் ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இதோ என்னுலான ஒத்தாசையை நான் செய்தாகி விட்டது. இனி மேல், அந்த ஊக்கமும் உற்சாகமும் உள்ள இளைஞர்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது தமிழ் மக்கள்— தமிழன்பர்களின் பொறுப்பு!



சென்ற செப்டம்பர் 26உ., 27உகளில் திருநெல்வேலிக்காரர்கள் கலை விழாக் கொண்டாடினார்கள். முதல் தினத்தைக் கலை மகளுக்கும் இரண்டாம் நாளைக் கம்பனுக்கும் சமபாகமாகப் பகிர்ந்தளித்தார்கள். கலை மகள் தினத்தில் கவிமணி ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளைக்கும், கம்பன் தினத்தில் ரஸிகமணி ஸ்ரீ சிதம்பரநாத முதலியாருக்கும் தலைமை தந்தார்கள். அந்த வியாஜத்தில், கவி மணியையும் ரஸிக மணியையும் சிறப்பாகப் பாராட்டி உபசரித்து மகிழ்ந்தார்கள். அதோ மேல் வரிசை வலது கோடியில் ஒளிந்து கொள்ளப் பார்க்கிறவர் தான் இந்த வைபவத்துக்கான மூல காரண புருஷரான ஸ்ரீ பாஸ்கரத் தொண்டைமான்.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

79. கரை வந்து விட்டது!

கங்கையைக் கடக்கிறது படகு. பரதன் குகன் கோசலை இன்னும் சிலர் படகிலிருக்கிறார்கள். கோசலையை யார் என்று குகன் கேட்டான். ராமனது தாய் என்று பரதன் சொன்னான். குகனையும் கோசலைக்கு அறிமுகப் படுத்தினான். கோசலையும் வாழ்த்தினாள். எத்தகைய ஆறுதலான வார்த்தைகளோடு வாழ்த்தினாள் என்பதைப் பார்த்தோம். இனி:

கோசலையின் பக்கத்தில், அன்புருவமாய் நின்ற சுமித்திரையைப் பார்த்து "இந்த அம்மாள் யார், தெரியவில்லையே? சொல்ல வேணும்!" என்று குகன் கேட்கிறான்.

அறந்தானே என்கின்ற
அயல்நின்றாள் தனைநோக்கி,
'ஐய! அன்பின்
நிறைந்தானை உரை' என்ன,
'நெறிஇறம்பாத் தன்மெய்யை
நிற்பதாக் கி,
இறந்தான்தன் இளந்தேவி,
யாவர்க்கும் தொழுகுலமாம்
இராமன்பின் பு
பிறந்தானும் உளன்என்னப்
பிரியாதான் தனைப்பயந்த
பெரியாள்' என் றான்

[அறந்தானே என்கின்ற: தருமதேவதையே என்று சொல்லத் தக்க; நெறி இறம்பாத் தன் மெய்யை நிற்பதாக்கி இறந்தான்: தர்ம நெறியை விட்டு விலகாது தன் பிறவியோடே யொட்டியுள்ள சத்தியத்தை இந்த உலகத்தில் நிற்கச் செய்துவிட்டுத் தான் இறந்து போனான்; அப்படி இறந்த தசரத சக்கரவர்த்தியின் இளந்தேவி; யாவர்க்கும் தொழுகுலமாம்: யாவரும் தொழுதற்குரிய தெய்வமாகும் ராமன்; லக்ஷ்மணன் இல்லையென்றால் ராமனுக்குத் தம்பியாக யாரும் பிறக்கவில்லை என்றுதான் சொல்லத் தோன்றும்; பிரியாதான் தனைப் பயந்த: லக்ஷ்மணனைப் பெற்றெடுத்த சுமித்திரா தேவி; குறிப்பு: உணர்ச்சிகளைக் காட்டக்கூடிய அழுத்தங்கள் அபூர்வமாகச் செய்யுளில் அமைந்திருக்கின்றன. அறந்தானே,—அன்பின் நிறைந்தானை,— இறந்தான் தன் இளந்தேவி,—இராமன் பின்பு பிறந்தானும் உளன், இவைகளிலுள்ள எதுகைகள் வந்து ஒலிக்கும்போது பாவத்துக்கு வேகம் அபாரமாக உண்டாய் விடுகிறது.]

சுமித்திரையைப் பற்றிச் சொன்ன பிறகு கம்பருக்கே ஒரு திகைப்பு உண்டாய் விடுகிறது. 'அடடா, பாவி கைகேசியையும் குகன் பார்த்து யார் என்கிற கேள்வி கேட்டு விடுவானே!' என்று கவிஞரது இதயத்தில் உண்டான உணர்ச்சி அப்படியே வெளி வருகிறது. கவிஞர் தன்னையும் படகில் வைத்துக் கொண்டிருக்கிறார். தனக் குள்ளேயே, பேசிக் கொள்ளவும் செய்கிறார்.

சுடுமயா னத்திடைத், தன்
துணைஏகத், தோன்றல்துயர்க்
கடலின்ஏ கக்,
கடுமையார் கானகத்துக்
கருணைஆர் கலிஏகக்;—
கழல்க்கால்மா யன்
நெடுமையால் அன்றளந்த
உலகெல்லாம், தன்மனத்தே
நினைந்துசெய் யும்
கொடுமையால் அளந்தானை,
'யார்இவர்என்(று) உரை' என்னக்,
குரிசில்கூ றும்:

[தன் துணை ஏக: கணவனான தசரதன் போய் ஒழிய; தோன்றல் துயர்க்கடலின் ஏக: மகனான பரதன் துயரக் கடலில் மூழ்க; கானகத்துக் கருணை ஆர்கலி ஏக: கருணை சமுத்திரம் போன்ற ராமன் நாட்டை விட்டுக் காட்டுக்குள் போக; கழல்க்கால் மாயன் நெடுமையால் அன்று அளந்த உலகெல்லாம்: விஷ்ணு பகவான் வாமனவதாரத்தில் நீண்டு வளர்ந்து மூன்றடி மண்ணுக்கென்று அளந்த உலகத்தை யெல்லாம்; கொடுமையால் அளந்தானை: கொடுமைக்கு உட்படுத்திய கைகேசியை; குரிசில் கூறும்: பரதன் சொல்லுகிறான்.]

கவிஞர் தன் உள்ளக் கொதிப்பைச் சொல்லித் தீர்த்து விட்டார். இனி பரதனது கொதிப்பைக் காட்டுகிறார்:

துன்பமெல்லாம் கைகேசி வயிற்றிலிருந்துதான் பிறந்ததாம்; உலகம்

ஆற்றும் பழியை வளர்க்க வந்த செவிலித் தாயாம் அவன்; அவன் வயிற்றில் பத்து மாதம் அல்லவா கிடந்தேன்! என்று அலறுகிறான் பரதன்.

படர்எலாம் படைத்தாளைப்
பழிவளர்க்கும் செவிலியைத்,தன்
பாழ்த்தபா விக்
குடரிலே நெடுங்காலம்
கிடந்தேற்கும் உயிர்ப்பாரம்
குறைந்துதேய,—
உடரெலாம் உயிரிலா
எனத்தோன்றும் உலகத்தே
ஒருத்தியன் றே
இடரிலா முகத்தாளை
அறிந்திலையேல், இந்நின்றாள்
என்னைஈன் றாள்.

[பாழ்த்த பாவி: இரக்கமற்ற பாவியாகிய இவளது: குடரிலே நெடுங் காலம் கிடந்தேற்கும்: வயிற்றிலே பத்து மாசம் கிடந்த எனக்கும்: உயிர்ப்பாரம் குறைந்து தேய: உயிரைத் தாங்கி நிற்கும் தேகம் தேய்ந்து போகும்படி: உடர் எல்லாம் உயிரிலா எனத் தோன்றும்: ராமனது பிரிவினால் சகல ஜனங்களுடைய உடலிலும் உயிர் இல்லைதானோ என்று சொல்லத் தோன்றுகிறநேரம்; ஒருத்தி அன்றே: ஒருத்தி மாத்திரமாய்; இடரிலா முகத்தாளை: துயரம் சற்றும் இல்லாத இந்த முகத்தாளை; துயர்அற்றிருப்பதாலேயே அவளைக் கைகேகி என்று குகன் இனம் கண்டு கொள்ளலாம் என்பது குறிப்பு.]

பரதன், முதலில் கோசலையையும் அதன் பிறகு, சுமித்திரையையும் பற்றி இதய பூரிப்போடு, பாராட்டி விரிவாய்ப் பேசினான். அதை எல்லாரும் அனுபவித்தார்கள். கடைசியாகக் கைகேசியைப் பற்றிப் பேச வந்தபோது அவளுடைய கொடுமையை அப்படியே எடுத்துச் சொல்லி விட்டான். கேட்டுக் கொண்டிருந்தவர்களுக் கெல்லாம் ரொம்பவும் சங்கடமாய்ப் போய் விட்டது — பரதனுடைய தாய் அல்லவா கைகேசி? ஒருவருக்கும் ஒன்றும் சொல்ல இயலவில்லை. இந்த அசந்தர்ப்பத்தைக் கவிஞர் எப்படி விடுவிக்கிறார் பாருங்கள்:—

[சந்தம் வேறு]

என்னைக் கேட்(டு)அவ்
இரக்கமி லாளையும்
தன்தனக் கையின்
வணங்கினன் தாய்என,—
அன்னப் பேடை
சிறையில தாய்க்கரை
துன்னிற்(று) என்னவும்
வந்தது தோணியே.

[அவ் இரக்கமிலாளையும்: அப்படி வருணிக்கப்பட்ட கைகேசியையும்; வணங்கினன் தாயென: தனக்கும் தாய்தான் என்று வணங்கினான்; அந்த க்ஷணத்திலேயே தோணி கரை வந்து சேர்ந்தது (துன்னிற்று). கரை வந்து சேரவும் படகோட்டிகள் துடுப்புகளை ஒடுக்கினார்கள். அன்னப் பறவையொன்று இறக்கையை ஒடுக்கிக் கொண்டு வந்தது போலிருந்தது அது.]

கைகேசியைக் கொடுமையான வார்த்தைகளினால் பேசிக் குறிப்பட்டது படகிலுள்ளவர்களைச் சங்கடமான நிலையில் வைத்துவிடத்தானே செய்யும்? அவர்களை அந்த நிலையிலிருந்து விடுவிக்கவும் வேண்டுமல்லவா? அதற்காகவே, கரையைக் கிட்டியது தோணி என்கிறார் கவிஞர். கிட்டியதும் எல்லாரும் ஒரு பரபரப்புடன் அப்படியு மிப்படியுமாகப் படகிலிருந்து இறங்க வேண்டியது தானே? பரதனது வார்த்தை, எல்லாருக்கும் உண்டான சங்கடம், எல்லாம் படகோடும் ஆற்றோடும் போய் விட்டது. அதி அற்புதமான நாடக முறையில் கவிஞர் விஷயத்தை முடிக்கிறார். செய்யுளின் அளவு பட்ட துள்ளலான சந்தம் அப்படி முடிக்கிறார் என்பதைத் தெளிவாய் எடுத்துக் காட்டுகிறது.




பையன்:—ஏ, போலீஸ்கார மாமா! இந்தக் கூட்டத்தில் அப்பா எங்கேயோ காணாமற் போய்விட்டார். அவரைக் கொஞ்சம் கண்டு பிடித்துக் கொடேன்!


விருந்தினர்கள் எப்
பொழுதும் விரும்பும்
மிகச்சிறந்தவைநரஸூஸ்
ஸையும் காபியும் தான் என்
பது வீட்டு எஜமானிக்கு
நன்றாகத் தெரியும்.
நரஸூஸ்
இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தது
HRR 21.
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி சேலம் தென்னிந்தியா



தீபாவளி
ரிலீஸ்
ராயல் டாக்கீ
டிஸ்டிரிபியூட்டர்ஸ்
மதுரை
PRESENT
தியாகராஜ பாகவதர்
ராஜகுமாரி · வஸந்தகோகிலம்
N.S.கிருஷ்ணன் · T.A.மதுரம் நடிக்கும்
ராயல் டாக்கீஸ்
ஹரிதாஸ்
டைரக்ஷன்: சுந்தர் ராவ் நட்கர்னி
ஸ்டுடியோ: சென்ட்ரல் ஸ்டுடியோஸ், கோவை



உங்கள் மனதிற்குகந்தது

டிலக்ஸ் டெனார் சிகரெட்டின் நறு மணத்தை நீங்கள் மிகவும் விரும்பு வீர்கள். உத்தரவாதமுள்ள 100% பொருக்கின வர்ஜீனியா புகையிலை தான் டெனார் செய்ய உபயோகிக்கப் படுகிறது. இதுவே எல்லோரும் விரும்பி ரஸிப்பதற்கும், தொண்டைக்கு கெடுதல் செய்யா திருப்பதற்கும் காரணம். மனோ ரம்மியமான இந்த சிகரெட்டை இன்றே வாங்கி நீங்கள் உபயோகியுங்கள்

டி லக்ஸ் டெனார் சிகரெட்டு

ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

tenor

is *truly* a de Luxe Cigarette

JAMES CARLTON LTD, LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA

கல்கி



KALKI அக்டோபர் 8, 1944 4 அணா

நகைச்சுவை அரசு

திரு N. S. கிருஷ்ணன் அவர்களின்

மதுரை ஸ்ரீ மங்கள பாலகான சபையாரால்

சென்னை

ஒற்றைவாடை தியேட்டரில்

7-10-44 முதல் மகத்தான 5-வது வாரம்

"பூம்பாவை" புகழ்

K. R. ராமசாமி

நடிக்கும்



மனோஹரா

(நாடகம்)

*

பாடல்கள் :

உடுமலை நாராயணக்கவி

திங்கள்தோறும்
நாடகம் கிடையாது.

பிரதி செவ்வாய், வியாழன், சனி இரவு 9-30 மணிக்கும்
பிரதி ஞாயிறு, புதன், வெள்ளி மாலை 6-30 மணிக்கும்
சனி, ஞாயிறுகளில் காம்பிளிமெண்டரி டிக்கட் செல்லாது

எமது அடுத்த நாடகம்
புதிய ஸீன்களுடன் S. V. சகஸ்ரநாமம் நடிக்கும்

இழந்த காதல்

டிக்கட்டு விபரம் : ரூ. 3-0-0, 1-12-0, 1-2-0, 0-9-0, 0-4-6

மானேஜர் : P. K. பிள்ளை

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.